# கார்ல் மார்க்ஸ்

ஆசிரியர்,

எஸ். சதாசிவம

இன்பவாழ்வுப் பதிப்பகம்,

ஆர். எஸ். புரம், :: கோயமுத்தூர்.

இன்பவாழ்வு வெளியீடு 1
முதற் பதிப்பு 1947

உரிமை பதிவு

விலை ஒரு ரூபாய்

# பதிப்புரை

மக்களின் வாழ்விலே இன்பம் பொங்கி வழியவேண்டும். எழில் ததும்பவேண்டும். அத்தகைய வாழ்வை நல்கும் சமுதாய அமைப்பை நிறுவும் அறிவை நம் ஆற்றலையும் மக்களுக்கு ஊட்டும் [illegible] யிருக்கும் நம் பதிப்பக வெளியீடுகள்.

எங்களது எண்ணங்களீடேற, தமிழ்நாடு தழைக்க, தமிழர் வாழ்வு வளம் பெறத் தமிழ் மக்கள் பேராதரவு தருவார்களென எதிர்பார்க்கின்றோம்.

இன்பவாழ்வுப் பதிப்பகத்தார்.

"என் அக்காள் வேதாம்பாள் அவர்களுக்கு"

# முன்னுரை

தமிழ்நாட்டு இளங்காளைகளுக்குப் பேரறிஞன் கார்ல்மார்க்சை அறிமுகப்படுத்துகின்றேன். மார்க்ஸ் உலகிற்கே ஓர் புதுமையானவன்! மனிதசமுதாய வரலாற்றிலேயோர் புதிய படலத்தைத் தொடங்கியவன்! மனிதனின் இன்ப வாழ்வு கருதிப் பலநூதனமான வாழ்க்கைத் தத்துவங்களை அள்ளி வீசியவன்! அவன் அறிவின் அனல் மூச்சு! சிந்தனையின் சிகரம்! அதனால் அவனுக்கு இப்புதுமையான முறையிலே அறிமுகம்.

மார்க்ஸ் எங்கு, எப்பொழுது பிறந்தான்? எப்படி வளர்ந்தான்? எங்கு கல்விபயின்றான்? எப்படி வாழ்ந்தான் என்று சொல்லிப் பழைய பாணியிலே அவனை அறிமுகப்படுத்தவில்லை. அப்படி அவனை அறிமுகப்படுத்துவது அவனது கொள்கைக்கே புறம்பானதுங்கூட.

இச்சிறு நூலின்மூலம் மனித வாழ்வுபற்றிய அவனது எண்ணங்கள்மீது உங்களுக்கு ஆர்வமூட்ட முயலுகின்றேன். அவனது அறிவொளி வீசும் தத்துவங்கள்மீது உங்களுக்குமோகமூட்ட முயலுகின்றேன். நீங்களே அவனது கொள்கைகளை அலசியாராய்ந்து படித்துப் பயன்பெற வேண்டுமென்ற பெருநோக்குடன்.

மார்க்ஸ் ஓர் மாபெருந்தீர்க்கதரிசி. பேரறிஞன். தேர்ந்த தத்துவஞானி. சிறந்த அரசியல் அறிஞன். மனிதவர்க்க முன்னேற்றத்திற்கு வழி

வகுத்த இலக்கியமேதை. இப்படியெல்லாம் சொல்லுவதனாலேயுங்கூட அவனது திறமையனைத்தையும் சொல்லிவிட்டதாகாது. இவ்வளவு பெருமைமிக்க மனிதனைப்பற்றி நாமும் அறிந்துகொள்ள வேண்டாமா?

மார்க்ஸினது வாழ்க்கைப்பாதை கற்களும், முட்களும் நிறைந்து கர்ணகடூரமானதாகவிருந்தது. வாழ்விலே மலையத்தனை துன்பங்களை அனுபவித்ததின் காரணமாக மனிதசமுதாய நல்வாழ்விற்குப் புத்தம்புதிய வழி வகுத்தான். அதுவே அவனது வாழ்வின் சரிதை.

மார்க்ஸைப் பற்றியும், மார்க்ஸீயத்தைப்பற்றியும் பல அறிஞர்கள் கொண்டுள்ள எண்ணங்களின் தொகுப்புத்தான் இச்சிறுநூல். இதை இந்நாட்டு இளங்காளைகள் முன்வைக்கின்றேன்.

ஆர். எஸ். புரம்.
1-9-47.

எஸ். சதாசிவம்.

# 1

புதுமைக்கும் பழமைக்கும் போர். நீண்ட போர். போரிலே புதுமைக்கு வெற்றி. பழமைக்குத் தோல்வி பழமையின் சார்பிலே நின்ற சமுதாய அமைப்பு அழிக்கப்படுகின்றது. பழமைக்குப் பாதுகாப்பளித்து வந்த அரசனின் யதேச்சாதிகார ஆட்சி முறை யழிக்கப்படுகின்றது. குடியரசு நிறுவப்படுகின்றது. காலம் காற்றினும் கடிந்து செல்கின்றது. புதுமை பழமையை வென்று தன் ஆதிக்கத்தை நிலை நாட்டியவுடனே அதனினும் புதுமை அடிவானில் உதயமாகின்றது. சற்று முன்பு புதுமையாகவிருந்த பழமை இப் புதுமையைக் கண்டு சீறுகின்றது. அதையழித்து ஒழிக்க முயலுகின்றது. மீண்டும் நாட்டிலே குழப்பம். போர் மூளுகின்றது. பிணமலைகள் குவிகின்றன. இரத்த வெள்ளம் கரைபுரண்டோடுகின்றது. கடைசியாகப் புதுமை வெல்கின்றது. பழமை அழிகின்றது. ஒருகாலத்தில் நாகரீகமென நினைத்து நிறுவப்பட்ட குடியரசு ஒதுக்கப்படுகின்றது. நவநாகரீகமான பொதுவுடைமை புகுத்தப்படுகின்றது. பழமையழிக்கப்படுவதும், புதுமை புகுத்தப்படுவதும் அன்றாட நிகழ்ச்சிகளாகிவிட்டன மேலை நாடுகளிலே. இது இன்று நேற்று ஏற்பட்ட நியதியல்ல. யுகயுகமாக நிகழ்ந்துவருவது.

உலகில் நிகழ்ந்துவரும் இம் மாபெரும் மாற்றங்களுக்குக் காரணங்கள் பல. அவைகளிலே தலைசிறந்தது மனிதனின் மனம். மனிதனின் மனத்திலுதிக்கும் எண்ணங்கள் கொள்கைகளாக அமையும்போது வலிவுகொண்டுவிடுகின்றன! இத்தகைய வலிமைமிக்கக்

கொள்கைகளை யுருவாக்கி உலகிற்களித்த மேதைகள் பலர் தோன்றி மறைந்துள்ளனர். அவர்களது கொள்கைகளின் காரணமாக உலகில் பெரும் பெரும் மாறுதல்கள் நிகழ்ந்திருக்கின்றன. மன்னர்களின் மணி மகுடங்கள் மண்ணிலே புரண்டிருக்கின்றன! ஏகாதிபத்தியங்கள் இடிந்து தகர்ந்துபோனவிடந்தெரியாது புல்முளைத்துப்போயிருக்கின்றன! மதங்களின் எல்லையற்ற ஆதிக்கங்கள் தவிடுபொடியாக்கப்பட்டிருக்கின்றன! ஆனால், இந்த மார்க்சினது கொள்கைகள் உலகைப்பாதித்ததுபோல் வேறெவரது கொள்கைகளும் உலகைப் பாதித்ததில்லை! அவனது கொள்கைகள் உலகின் போக்கையே யொரு புரட்டுப் புரட்டியெறிந்துவிட்டன, கண்ணை மூடிக்கொண்டு காற்றினும் கடிந்துசென்று கொண்டிருந்த உலகைத் தடுத்து நிறுத்தினான்! அத்துடன் நின்றுவிடவில்லை. அதன் போக்கையே மாற்றி யமைத்தும் விட்டான். அறியாமையென்னும் இருள் சூழ்ந்த உலகிற்கு அறிவொளியூட்டினான். பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக நின்று நிலவும் சமுதாய அமைப்பைத் தகர்த்தெறிய வழிவகுத்தான். அதன்மீது என்றுமில்லாத புதிய சமுதாய அமைப்பை நிறுவத் திட்டம் தீட்டினான். மனிதனின் அடிமை விலங்கை உடைத்தெறிந்தான். மனிதனை மனிதனாக்கினான். அவனது வலிமை மிக்க கருத்துக்கள் உலகைப் புதுப்பித்துவிட்டன. தூய்மைப்படுத்திவிட்டன. அதன் காரணமாக இன்று மனித குலம் புது யுகத்தின் தலைவாயிலில் நிற்கின்றது. பழய யுகத்தின் கறைபடிந்த போர்வை கிழித்தெறியப் படுகின்றது. பழய சமுதாய அமைப்பின் அஸ்திவாரம் இடிந்து தகர்கின்றது. ஏழை மக்களின தேவைகளும், ஆசைகளும் உருவாகும் புது உலகின் போக்கை நிர்ண

யிக்கின்றன. மார்க்சினது மனத்தின் மாண்பைக் கண்டீர்களா?

இவ்வளவு சிறந்த புரட்சி வீரனை நம் நாட்டவரும் அறிந்துகொள்ளவேண்டாமா? பழமைக்கும், புதுமைக்குமிடையே ஊசலாடித் தவிக்கும் நாம் மார்க்சைப் பற்றியறியவேண்டியது அவசியம். அனுதிகாலத்து இருளைப்போக்க அவனது அறிவொளிவீசும் தத்துவங்கள் நமக்குத் தேவை. அவையன்றைய ருஷ்யநாட்டு மக்களுக்குத் தேவையாகவிருந்ததைவிட இன்றைய தமிழ் நாட்டவர்களுக்குப் பெரிதும் தேவை. நம் நாட்டின் இன்றைய பரிதாப நிலைமையைப் பாருங்கள். சிந்தனையில், செயலில், வாழ்க்கையில், அரசியலில் எங்கும் எதிலும் ஒரே குழப்பம். நாகரீகம் மலிந்து கிடப்பதாகச் சொல்லப்படும் இவ்விருபதாம் நூற்றுண்டில் கூட மனிதன் நினைக்கவும் முடியாத அவ்வளவு இழி நிலையிலிருக்கின்றோம். பிறப்பிலே பேதங்காட்டி சமுத்தாயத்தின் ஓர் பகுதியை நாயினுங்கடையாக நடத்துகின்றோம். ஒரு சிலரை சமுதாயத்தின் உச்சிமேல் வைத்து வணங்கி வாழ்த்துகின்றோம. பொருளாதாரத் துறையிலே மக்கள் படுந் துயரங்களுக்களவேது? சமுதாயத்திலே ஆதிக்கஞ் செலுத்தும் செல்வச் சீமான்கள் மக்களைப் படுத்தும்பாடு சொல்லத்தரமன்று. மனித சமுதாயமே அவர்களுக்குக் குற்றேவல் புரியுங் கூலிக் கூட்டமாக வாழ்ந்து வருகின்றது! இந்த ஆதிகாலத்து அநாகரீகம் அச்சுக்குலையாமலிருக்க அவர்கள் செய்யும் அட்டூழியங்களுக்களவேயில்லை. அதன் காரணமாக மக்களது வாழ்வு பாழ்பட்டுவிட்டது. கலைகளின் பேராலும் தத்துவங்களின் பேராலும் சென்று போன நீண்ட இருண்ட கால வாழ்விற்கழைத்துச் செல்லப்படுகின்றோம். இந்தக் கேடுகெட்ட நிலையைத் திருத்தியமைக்க

வேண்டாமா? இந்தக் காட்டுமிராண்டித்தனத்திலிருந்து மீளவேண்டாமா? நாமும் மனிதர்களாக வாழவேண்டாமா? இக் கொடுமைகளின் கோரப் பற்களிலிருந்து தப்ப முயலும தமிழனின் தலையிலே சம்மட்டிகொண்டு தாக்குகின்றது அதிகார வர்க்கம்! அடிபட்டு வீழ்ந்த தமிழன் வீறுகொண்டெழுந்தால் சுட்டு வீழ்த்துகின்றது! இப் பேராபத்துகளிலிருந்து எப்படி மீள்வது? எப்படி வாழ்வது? இதற்கோர் வழியில்லையா? சிந்தித்துப் பாருங்கள் தோழர்களே!

நமது இழி நிலையை யெண்ணி யெண்ணி யேங்குவதில் பயனில்லை. நமது தோல்விகளை நினைந்து நிலைகுலைவதிலும் பயனில்லை. நாட்டின் நலிவைத் துடைக்கும் பொறுப்பு நமமீது வீழ்ந்துவிட்டது. இதைத் தட்டிக் கழிக்க முயலுவது கடமையைச் செய்யத் தவறியதாகும. அதன் காரணமாக நாட்டின் நிலை படுமோசமானதாகி விடும் ஆகவே இப்பெரும் பணியைப் புன்முறுவலுடன் ஏற்றுக்கொள்ளுவோம். மக்களின் நல்வாழ்விற்காகப பாடுபடுவதைவிடச் சிறந்த செயல் வேறென்னவிருக்கின்றது? அவர்களது இன்பவாழ்விற்கு வழி வகுப்பதைவிடச் சிறந்த செயல் வேறென்னவுளது இவ்வுலகில்? பேரறிஞர்களின் பொன்னுரைகளைக் கற்போம். மக்களின் இன்பவாழ்விற்கு வழி வகுப்போம போர் முரசு கொட்டுவோம. எழுங்கள் என்னிளந்தோழர்களே வீண் பொழுது போக்க இது நேரமன்று. புத்தனின புரட்சிப் புயலையடக்கிய ஆரிய அநாகரீகம நமமீது சீறிப் பாயலாம். நம்மையழித்தொழிக்க முயலலாம். அதுகண்டு அஞ்சுபவர்களா நாம? நமது கொளகைகள் புதியவை. அவை அறிவின் எல்லைக் கோட்டைக் கடந்தவை. நமது போர் முறை புதிது. அது மார்க்சியத்தை யடிப்படை

யாகக்கொண்டது. அதற்குத் தோல்வியேது? வெற்றி நமதே. புறப்படுங்கள்.

காலப்போக்கின் காரணமாகவும், தலைவர்களது இடைவிடா உழைப்பின் காரணமாகவும் நம் நாட்டவரது எண்ணங்களும் மாறுபட்டுவருகின்றன. அறியாமையில் கவிந்துகிடந்த மக்களின் மனதிலே அறிவொளிபட்டு கின்றது. அதன்காரணமாகப் பழைய பாசி படர்ந்த கொள்கைகள் யாவும் அலசியமாயப்படுகின்றன. அவை களைத் தாங்கி நிற்கும் மதங்களின் தத்துவங்கள் கடுமையான தணிக்கைகளுக்காளாகிவிட்டன. மதக் கொள்கைகளையாதாரமாகக் கொண்டு நிறுவப்பட்ட சமுதாய அமைப்பானது ஆட்டங்கண்டுவிட்டது. பழமையை யழிக்கப் புதுமை யுருவாகிவருகின்றது. அது கண்டு இளைஞனின் மனம் பூரிக்கின்றது. நமது நாட்டின் ஆட்சிபீடத்திலமர்ந்து அரசுபுரியும் பழமை, புதுமையை யழிக்க முயலுகின்றது. அதன் காரணமாக நாட்டிலே யெங்கும், குழப்பம், கலக்கம், கலவரம். சமுதாயத்தின் தூண்களாக விருந்த மதங்களும் அவற்றைச்சார்ந்த வாழ்க்கைமுறைகளும் அழிவைநோக்கி நிற்கின்றன. இந்த நிலையிலே புதுமையை வரவேற்று வாழ்வளிக்க மக்களின் மனம் பண்படுத்தப்பட வேண்டாமா? இளைஞர்களாகிய நீங்கள் இது விஷயத்திலே ஆழ்ந்த கவனஞ் செலுத்தவேண்டும். பழமையை யொழிக்க மக்களுக்குத் துணிவூட்டவேண்டும். புதுமையையேற்க அவர்களது மனதிலே மாற்றங்காணவேண்டும். இல்லையேல், நமது எண்ணங்கள் ஈடேரு. அதனால் நாட்டின் முன்னேற்றம் தடைபடும். மக்கள் வாழ்வு பாழ்படும். ஆகவே இளைஞர்கள், புத்துலகச்சிற்பி மார்க்ஸினது தத்துவங்களை யறிய வேண்டும். அவற்றை நாட்டிற்குகந்தவகையில் கையாண்டு நாட்டைப் புதுப்பிக்க முயலவேண்டும்.

இன்று நம்நாட்டில் பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள் எவ்வித லட்சியமுமின்றி வாழ்ந்துவருகின்றனர். அதன்மூலம் அவர்களது வாணுட்கள் வீணுட்களாகக் கழிகின்றன. பெரும்பாலான இளைஞர்கள் நாட்டின் இழிநிலையைப் பற்றிக்கவலைப்பர், மக்களின் துயரங்களைக் கண்டு இரக்கமோ கொண்டதாகத் தெரியவில்லை. இப்படிப்பராமுகமாய் வாழ்வது இளைஞர்களுக்கழகு? இதுவா இளமையின் லட்சியம்? இல்லவேயில்லை. இளமையின் லட்சியமே வேறு. இளைஞர்கள் தங்களுக்கென ஓர் உயர்ந்த லட்சியத்தை வகுத்துக்கொள்ளவேண்டும். அந்த லட்சியத்தைப் பூர்த்திசெய்ய இளமைபலியிடப் படவேண்டும். ஆகவே, தமிழ்நாட்டிளங்காளைகளே உங்களது லட்சியத்தையுணருங்கள். உங்களது கடமையைச் செய்ய புன்முறுவலுடன் முன்வாருங்கள். தமிழ் நாடு மட்டுமல்ல, உலகமே உங்களது பணியை யெதிர்பார்த்து ஏங்கித் தவிக்கின்றது. கடமையைச் செய்வதின் காரணமாக இன்றையவுலகம் உங்களை வெறுக்கலாம், எதிர்க்கலாம். புறக்கணிக்கலாம். எள்ளி நகையாடலம். அதுபற்றி நீங்கள் கவலையோ சோர்வோ கொளளவேண்டியதில்லை. உங்களது அறிவையும ஆற்றலையும் கண்டு மக்கள் மலைக்குங்காலம வந்தே தீரும். அந்தப்புகழ் மாலையைச் சூட்டிக் கொள்வது உங்களது வாழ்வின லட்சியமாக விருக்கட்டும். அதுதான வாழ்வு. அதுதான, இளமையின் லட்சியம். கடமையுங்கூட. ஆகவே இன்றைய மக்களது போற்றல்களையும், புகழ்மாலைகளையும பொருட் படுத்தாதீர்கள். அவையாவும உங்களது மனதை மயக்கவந்த மாயமாலங்கள். இவைகளை யொரு பொருட்டாக வெண்ணினீர்களோ வந்தது ஆபத்து. இளமையின் லட்சியம் விழலுக்கிரைத்த நீராகிவிடும். ஆகவே ஆழ்ந்து சிந்தியுங்கள்.

கடமையை யுணருங்கள். செயலாற்றிச் சீரும் சிறப்பும் பெற்று வாழுங்கள்.

மேலைநாடுகளிலே மனிதனின் அறிவு விரிவு பெற்ற தின் காரணமாகப் பொருளுற்பத்தி முறையிலே பெரும் மாற்றங்கள் நிகழ்ந்தன. பொருள்கள் ஏராளமாக உற்பத்தி செய்து குவிக்கப்பட்டன. செல்வங்குவிந்தது. செல்வம் பெருகப்பெருகச் செல்வவான்களின் ஆசைகளும் பெருகின. செல்வவர்ன்கள் மக்களைச்சுரண்டிச் செல்வத்தைப் பெருக்குவதிலேயே பெரிதும் நாட்டங் கொண்டனர். அதனுல் மக்கள் வாழ்வுபாழ்பட்டது. எங்கும் வறுமையும் துயரமும் மக்களைப் பிய்த்துத்தின்றன. மலையொத்த செல்வம் சிலரிடம் குவிந்தது. எங்கும் வறுமை மலிந்தது. வானளாவிய மாடமாளிகைகளிலே வாழ்வோர் சிலர். கூனிக்குறுகிக் குடிசைகளிலே குந்திக்கிடப்போர் கோடானகோடி. உயர்ந்த ஆடையாபரணங்களையணிந்து ஆடம்பரமாக வாழ்வோர் ஓர் புறம். கோவணமே ஆடையாகக்கொண்டு குப்பைமேடுகளிலே புரளும்கூட்டம மற்ருேர்புறம். நெற்றிவியர்வை நிலத்தில்விழ உழைத்துழைத்து உருமாறியுழலும் மக்கட் கூட்டமோர்புறம். அவர்களது உழைப்பின் பலனை உறிஞ்சிச்சுகபோகங்களிலே மிதக்கும் கூட்டம் மற்ருேர்புறம. ஆளும்வர்க்கத்தின் அதிகாரமமதையோர்புறம அதற்கு அஞ்சி மாய்ந்து மடியும், மனித குலம் மற்ருேர் புறம். உழுது விதைத்தறுப்பார்க்கு உண்ண உணவில்லை. ஆடை நெய்வோருக்கு அணிய ஆடையில்லை. மாடமாளிகை கட்டுவோருக்குக் குடியிருக்கக் குடிசை கூடயில்லை. எங்கும் பஞ்சம், பிணி, வறுமை. இக் கொடுமைகளைச் சகியாது மக்களிடும் ஓலம் அணடசராசரங்களையும் அதிரச் செய்தது. இக் கோரக் காட்சிகளைக் கண்டான மார்க்ஸ். கதி

கலங்கினான். மனம் வெதும்பினான். ஏழையின் கண்ணீரைத் துடைக்க முடிவுகொண்டான். அதையே தன் வாழ்வின் நோக்கமாகக்கொண்டான். அதற்காகவே வாழ்ந்தான். போராடினான். அப்போரிலே வெற்றிகண்டான. வெற்றி! வெற்றி!! பெருமித வெற்றி!!!

சென்றுபோன அந்தநீண்ட இருண்ட பயங்கர நாட்களிலே பிற்போக்காளர்களை யெதிர்த்துப் போராடுவது சுலபமானகாரியமென நினைக்கின்றீர்களா? நிலமுதலாளிகள் சமுதாயத்தின் கடவுள்களெனக் கருதப்பட்ட அந்தக் காலத்திலே சமுதாயத்தை மாற்றியமைக்க முயலுவது எளிதான செயலென எண்ணுகிறீர்களா? இத்தகைய செயல்களிலீடுபட்ட வீரர்கள் பலர் சித்திரவதை செய்யப்பட்டிருக்கின்றனர்! உயிருடன் நெருப்பிலிட்டுக் கொளுத்தப்பட்டிருக்கின்றனர்! சிறையிலே தள்ளிச் சீரழிக்கப்பட்டிருக்கின்றனர்! இன்னும்பல பயங்கரக் கொடுமைகளுக்காளாகி யுள்ளனர். மார்க்சும் தனது வாழ்நாட்களிலே மலையத்தனை துன்பங்களுக்காளாகி யுள்ளான். கொந்தளிக்கும் கடலலைகள் போன்று துன்ப அலைகள் இடைவிடாது மோதி மோதி யவனை யழிக்க முயன்றன. அதிகாரவர்க்கத்தின் அல்லலோர்புறம். சீமான்களின் சீற்றம் மற்றோர்புறம். இருசாராரது கொடுமைகளும் போட்டியிட்டுக்கொண்டு மார்க்சை யும்அவனது குடும்பத்தையும் அலக்கழித்தன. இக் கொடுமைகளி னதிர்ச்சியிலே சிறிப்புகைந்து குமுறி யெழுந்தது அவனது அறிவுச்சுடர்! இப்பேராபத்துக்களிடையேயும் அவனுக்கு உற்றதுணையாகவிருந்து ஊக்கமூட்டியவள் அவனது வாழ்க்கைத் துணைவி ஜென்னியாகும். வாழ்க்கைத துணைவி யென்ற பெயருக்கேற்ப அவனுக்குற்ற துணையாக விருந்துகாத்தனள். அடுத்தபடியாக மார்க்சினது வாழ்க்கைச் சுழலுடன் பின்னிக்

இடிப்பவன் அவனது நண்பன் ஏங்கல்ஸ் என்பான். இவன் ஓர் சிறந்த அறிஞன். இவனும் மார்க்சுக்குப் பேருதவியாக இருந்தான்.

மார்க்ஸ் மறைந்துவிட்டான். ஆனால், அவனது அறிவுச்சுடர் பேரொளியுடன் உலகிலுலவுகின்றது; பேசுகின்றது. மக்களின் மனதிலே புகுந்து ஆட்சி செலுத்துகின்றது உலகில் இதுவரை எத்தனையோ அறிஞர்கள் தோன்றியிருக்கின்றனர். வீரர்கள் தோன்றியிருக்கின்றனர். அழகிகள் தோன்றியிருக்கின்றனர். ஆனால், அவர்களின் பெயர்களெல்லாம இந்தக்கால தேவனின் கோலத்தால் அழிந்துவரக்காண்கின்றோம். ஆனால் அந்தக் காலதேவனும் கண்டஞ்சும் வகையில் மார்க்சினது புகழ் ஓங்கி வருவதையும் காண்கின்றோம்! ஒரு நூற்றாண்டு உருண்டோடிய பின்பும மார்க்சினது பெயர் உலகின் மூலை முடுக்குகளிலெல்லாம் பரவிவருவதைக்காண்கின்றோம்!

மார்க்ஸ் விண்ணினும் விரிந்தவுள்ளங்கொண்டவன். வானினும் பரந்த நோக்கமுடையவன். மானிட இனத்தின்மீது மங்காத அன்பு கொண்டவன். எவ்வளவு சிறந்த அறிஞனாக இருந்தானோ அவ்வளவு சிறந்த அன்பனாகவுமிருந்தான். எவ்வளவுக்கெவ்வளவு மக்களை விரும்பினானோ அவ்வளவுக்கவ்வளவு அவர்களாலேயே வெறுக்கப்பட்டான்! அதுகண்டு மனமுடைந்தானில்லை. அகிலவுலகமக்களின் நலனை கருதித் தன்வாழ்வையே அர்ப்பணம செய்தான். வாழ்வின் சோகக்குழியிலே வீழ்ந்து அழுந்தி அவதிப்பட்டான். மக்களின் நல்வாழ்வு கருதி மலையத்தனை [illegible] காரணமாக இ[illegible]கொடூரமான கொடுமைகள் அவனை நினையாத நேரமில்லை! அவனது அறிவின திறனை

வியந்துபுகழாத அறிஞனில்லை! அவனது ஆற்றலைக் கண்டு வியக்காத நாடில்லை! உலகவரலாற்றிலே மார்க்சினது பெயர் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட்டுவிட்டது. உலகமுள்ளளவும் மார்க்சினது பெயர் மங்காது நின்று நிலவும்.

# 2

மக்கள் யாவரும் இன்பமாக வாழ வேண்டுமென்று பல்லூழி காலமாகப் பலர் சிந்தித்ததுண்டு. சிந்தித்ததுடன் நில்லாது செயலிலுமிறங்கினர் சிலர். மக்களின் துயரங்களைப் போக்க மதவாதிகள் தவங்கிடந்தனர். வேதாந்திகள் வேதமோதினர். தத்துவ ஞானிகள் புதுத் தத்துவங்களை வகுத்துதவினர். கவிகள் கவிமழை பொழிந்தனர். அவையாவும் விழலுக்கிறைத்த நீராயின. அவை மக்களின் துன்பங்களை ஒழிக்கவுமில்லை; அவர்களுக்கின்பத்தை யளிக்கவுமில்லை.

ஏழையின் குமுறல் கேட்டு இதயமொடிந்தவர்களிலே தலைசிறந்தவன் புத்தன். அரசிளங் குமரன். ஆளப்பிறந்தவன், இன்பத் தோணியிலே மிதக்கப் பிறந்தவன். கோலாகலமாக வாழ்ந்து வந்தவன். ஏழை படும்பாடு கண்டு ஏங்கினான். ஏழையின் கண்ணீரைக் கண்டு கலங்கினான். அரச போகத்தைத் துச்சமாக மதித்தான். இன்ப வாழ்வைக் காலாலுதைத்துத் தள்ளினான். ஏழையின் கண்ணீரைத் துடைப்பதையே தன் வாழ்வின் நோக்கமாகக் கொண்டான். அதற்காக ஓயாதுழைத்தான். அக்கால அநாகரீக வாழ்வை யறவே ஒழிக்க முயன்றான். புதிய வாழ்க்கை முறையைப் புகுத்தி, இன்ப வாழ்விற்கு வழிவகுத்தான். அதன் மூலம் மக்களின் துன்பங்களைக் களைந்தெறிய முயன்றான். அதிலே பெரிதும் வெற்றிகண்டான். புத்தனது புதுமையைக் கண்ட பழமை வெகுண்டது. வீறு

கொண்டெழுந்தது. சீறிப்பாய்ந்தது. பழமையின் பித்துக் கொள்ளிகள் புதுமையை யழித்தனர். புதுமை தோற்றது, பழமை வென்றது.

உலகிலுதித்த புரட்சி வீரர்களிலே தலை சிறந்தவன் புத்தன். புத்தனது பொன்மொழிகள் மிகமிக புரட்சிகரமானவை. ஆரிய அநாகரிகத்தை வேருடன் வெட்டி வீழ்த்த முடிவுகொண்டவன். முயன்றவன். புத்தனது பொன் மொழிகளைக் கேட்டுப் புரட்சியிலீடுபட்டோர் பலர். ஆனால் பழமையின் பிடியிலே சிக்குண்ட, ஆரியத்தின் அணைப்பிலே மயங்கிக்கிடந்த மக்கள் புத்தனது புதுமை கண்டு வெகுண்டனர். வீறுகொண்டெழுந்தனர். புரட்சி வீரர்களைக் கொன்று குவித்தனர். கழுவிலேற்றினர். புத்தனது புனித எண்ணம் தோற்கடிக்கப்பட்டது. அவனது தோல்வி புதுமையின் தோல்வி. பழமையின் வெற்றி. அறிவின் தோல்வி. அறியாமையின் வெற்றி. நாகரீகத்தின் தோல்வி. அநாகரீகத்தின வெற்றி. பழமை வெற்றி முழக்கத்துடன் ஆட்சி பீடத்திலமர்ந்தது. அன்று முதல் இன்றுவரை பழமையே யாள்கின்றது! புத்தனது காலமுதல் இன்றுவரை நாட்டில் எத்தனையோ புரட்சி வீரர்கள் தோன்றி மறைந்தனர்! எழுந்த புரட்சிகளும் பல! இருந்துமென்ன? எங்கும் தோல்வி! எதிலும் தோல்வி. பழமை வெற்றியின் சிகரத்தில் இறுமாப்புடன் வீற்றிருக்கின்றது. ஆட்சி புரிகின்றது. அதனகாரணமாக நாடு அல்லோலகல்லோலப்பட்டுக் கிடக்கின்றது. நாம் நாயினும் கடையாக வாழ்கின்றோம். வாழ்கின்றோம என்று சொல்லுவது கூடத்தவறு கெட்டு அழிகின்றோம என்று சொல்லுவதுதான் சரி.

அறியாமையிலுழன்று தவிக்கும மக்கள் புத்தன் ஓர் மதபோதகனென்றும, அவனுக்கும் நாம் சொல்லும்

புரட்சிக்கும் எவ்விதத் தொடர்புமில்லையென்றும் வம்பு பேசுவர். அது தவறு. பழைய வாழ்க்கை முறை மக்களின இன்ப வாழ்விற்குகந்ததாக இருக்கவில்லை. அதன்படி வாழ்ந்து வந்த மக்கள் துன்பக்கடலிலாழ்ந்து தவித்தனர். அவர்களை யித் துன்பக் கடலிலிருந்து கரையேற்ற முயன்முன். அதற்காக புதிய வாழ்க்கை முறையை—புதிய வாழ்க்கைத் தத்துவங்களை—வகுத்து தவினான். அவைமூலம மக்களது துன்பங்களைப்போக்க முயனருன் என்பதையெந்த அறிவாளியாவது மறுக்க முடியுமா? இந்தப பழமையை யொதுக்கிப் புதுமை யைப் புகுத்துதலைத்தான் புரட்சியென்கிறேன். இந்த மாற்றத்தைவிரும்பியதினாகாரணமாகத்தான் அன்றைய சமூதாயத்திலுச்சியிலிருந்தவர்கள் புத்தனை எதிர்த் தனர். அவனது எண்ணங்கள வெற்றி பெருமலிருப்ப தற்காகப் பலர் சூழ்ச்சிகள் செய்தனா. அவை காரண மாக அவனது எண்ணங்கள ஈடேருது போயின.

மேலை நாடுகளிலும் பலர் ஏழைகளின் கண்ணீரைக் கண்டிரங்கியதுண்டு. அவர்களின் துயரங்களைப் போக்க முயன்றதுமுண்டு. அவர்களில் பெரும்பாலோர் செல்வ வான்கள். ஏழைகளின் பாலிரங்க வேண்டுமென்றும் அவர்களுக்குத் தாராளமான தர்ம சிந்தனையிருக்கவேண் டுமென்றும் துதி பாடுவதுடன நின்றுவிட்டனர். சிலர் சீமான்களின் இரக்கமற்ற நிலைகண்டு சீற்றங் கொண் டனர். ஏழைகளைச் செல்வவான்கள்மீது ஏவினர். இருபிரி வினர்களும் முட்டிமோதினர். அதைக்காரணமாக ஆட்சி முறைகள் அழிக்கப்பட்டன. அரசர்களின் தலைகள் மண்ணிலுருண்டன. மாடமாளிகைகள் இடித்துத் தகர்க்கபபட்டன. சீமான்களின் சிரங்கள் கொய்தெறியப் பட்டன. இருந்துமென்ன? ஏழ்மை அழியவுமில்லை,

வறுமையொழியவுமில்லை. இவை வெறும் அமளியாக முடிந்தனவேயன்றி ஏழ்மைக்குக் காரணமான சமுதாய அமைப்பு மாறினபாடில்லை. இவை போன்ற பயங்கரப் போர்கள் பல மேலை நாடுகளிலே தோன்றி மறைந்துள்ளன. அவை காரணமாக மக்களடைந்த அவதிகள கொஞ்சநஞ்சமல்ல. ஏழ்மையின் காரணத்தைக்கண்டு அதனை யழித்தொழிக்க வழி தெரியாது தவித்தனா அக்கால அறிஞர்கள.

சமுதாயத்தைக்கப்பிக் கொண்டிருந்த காரிருளை பபோக்க முயன்றோர் யாவரும, அதன் காரண மின்னதென்பதைக் கண்டறிய முயன்றோர் அல்லை. சமுதாயததினமீது படிந்துகிடந்த மாசுகளை மேலெழுந்த வாரியாகத்துடைக்க முயன்றதுடன் நின்றுவிட்டனர். அதனுலவர்களது முயற்சிகள் வெற்றிபெறுமல போய்விட்டன. அக்கால அறிஞர்கள் யாவரும் சமுதாய அமைப்பின் குறைபாடுகளை யுணர்ந்தனர். அவற்றை வன்மையாகக கண்டிக்கவும செய்தனர். குறை கூறுவதாலும, கண்டிப்பதாலும் சமுதாயம திருந்திவிடுமா? சமுதாயத்தை எப்படிப் புதுப்பிப்பது? எப்படி மாற்றியமைப்பது? எந்த அஸ்திவாரத்தின் மீது புதிய சமுதாயத்தை அமைபபது? அதற்காக மக்கள் செய்யவேண்டியதென்ன? எனபனபோன்ற கேள்விகள அக்கால அறிஞருலகைத் திணர அடித்துவந்தன. பெரும்பாலான அறிஞர்கள் சமுதாயத்தைத் திருத்தியமைப்பதிலேயே நாட்டம செலுததினர்களேயன்றி, அதைத் தகர்த்துத் தரைமட்டமாக்கிவிட்டு, புதிய சமுதாயத்தை நிறுவவேண்டுமெனபதை யாரும் உணரவில்லை.

மார்க்சினது மனமும இது விஷயத்திலே குழம்பிக் கிடந்தது. அதன் காரணமாக அவனது மனம் அமைதி

யின்றி அலையாய்ந்தது. ஏழ்மைக்குக் காரணம் செல்வ வான்களல்ல; துன்பத்திற்குக்காரணம் இன்பமனுபவிப்போர் அல்ல. அந்த சமுதாய அமைப்பிலே எங்கோ ஏதோ, பெருந்தவறிருக்கின்றதென்பதை உணர்ந்தான். அதைக்கண்டறிய ஆவல்கொண்டான். அதற்காகநீண்டதொரு ஆராய்ச்சியிலிறங்கினான். ஆராய்ச்சியென்றால் அல்பசுல்பமான ஆராய்ச்சியல்ல; தன் வாழ்நாட்களிலே பெரும்பகுதியை ஆராய்ச்சியிலேயே கழித்தான். பல மொழிகளிலுள்ள பல நூற்றுக்கணக்கான அரிய நூல்களைப்படித்தான். இரவு பகல் ஓயாது படித்தான். கரைத்துக்குடித்தான். சிந்தித்தான். ஆராய்ந்தான். உலகம் எப்படி இயங்குகின்றது. உயிர்கள் எப்படி உற்பத்தியாகின்றன? எப்படி வளர்ந்து, வாழ்ந்து மடிகின்றன? மக்கள் ஏன் உண்ணுகின்றனர்? ஏன் உறங்குகின்றனர்? ஏன் காதலிக்கின்றனர்? ஏன் போராடுகின்றனர்? என்பனபோன்ற இயற்கையின் நியதிகளைக்கண்டறிய முயன்றான். இவைகளைத் தெளிவாகத் தெரிந்துகொண்டோமானால் மனித வாழ்வுபற்றிய சகல சிக்கல்களையும் விடுவிக்கமுடியுமல்லவா? இவைகளை அறியும் பொருட்டு உலகவரலாறு, மனிதவரலாறு, சமுதாய அமைப்பு அதன் வளர்ச்சி, பொருளுற்பத்தி, மதம், தத்துவம் இலக்கியம் கலைகள் ஆகிய விஷயங்களைப் பற்றி வெகு நுணுக்கமாக ஆராய்ந்தான். இந்த ஆராய்ச்சியில் அவன் கண்ட வெற்றியின் காரணமாகத்தான் மனிதனைப்பற்றி இதுவரை கட்டப்பட்டு வந்த மானசீகக் கோட்டையை இடித்துத் தகர்த்தெறிய முனைவந்தான்! மனிதவாழ்வைப்பற்றியவன் ஆராய்ந்து கண்டறிந்தவற்றைப்பற்றி பல அறிஞர்களுடன் உரையாடினான். அவை மூலம் தனது தத்துவங்களை ஒழுங்கு படுத்திக்கொண்டான். பாட்டாளி மக்களுடன் நெருங்கிப்பழகி அவர்களது

தேவைகளையும், ஆசைகளையுமுணர்ந்தான். அரசியல் விஞ்ஞானம், கலை முதலிய துறைகளில் மக்கள் கவனஞ் செலுத்துவதற்கு முன்பு அவர்களுக்கு உணவும், உடையும்தான் அவசியமென்பதை யுணர்ந்தான். உலகில் நின்று நிலவும் துன்பங்களுக்கும், துயரங்களுக்கும் காரணம் சமுதாயத்தில் நிலவும் ஏற்றத்தாழ்வு. இந்த ஏற்றத்தாழ்வுக்குக் காரணம் தனியுடைமை. ஆகவே தனியுடைமையை யழித்துப் பொதுவுடைமையைப் புகுத்துவதன் மூலம் உலகைப் புனிதமாக்க முடியுமெனக் கண்டான். மனித சமுதாய முன்னேற்றத்தை விரும்பும் தலைவர்கள் சமுதாய அமைப்பை மாற்றியமைக்க வேண்டும். இதை மார்க்சுக்கு முன்னிருந்தவர்களால் உணரமுடியவில்லை. சமுதாயப் புரட்சியின் மூலந்தான் மக்களைப் பிணைத்திருக்கும் அடிமைத்தளைகளை யுடைத்தெறியமுடியும். இப்புரட்சியை நடத்தும் ஆற்றல் தொழிலாளரிடம் தான் அடங்கிக் கிடக்கின்றது! தொழிலாளரினமே புரட்சிகரமானது. ஆகவே, அவர்கள் தான் புதுவுலகைச் சமைக்கும் சிற்பிகளென்பதை உலகிற்குணர்த்தினான்.

சமுதாய அமைப்பு, அதன் வளர்ச்சி, ஆகிய இவைகளைப் பற்றி ஆழ்ந்து ஆராய்ந்ததின் காரணமாக சமுதாயம் வளர்ச்சி குன்றி எப்பொழுதுமே தேங்கி நின்றுவிடாது என்பது தெரியவந்தது. சமுதாயம் அபிவிருத்தி அடைந்தே தீரும். பொருளுற்பத்தி முறை மாறும்பொழுது, சமுதாயம் தனது நிலையிலிருந்து மற்றொரு நிலைக்கு மாறும். இந்த மாற்றந்தான் சமுதாய வளர்ச்சியாகும். பொருளுற்பத்தி முறையிலேற்படும் மாற்றந்தான் சமுதாய வளர்ச்சிக்குக் காரணமேயன்றி வேறெந்த சக்தியும காரணமல்லவென்பது மார்க்ஸ் கண்ட முடிவு. சமுதாயத்தைப் பற்றிய அவனது

ஆழ்ந்த ஆராய்ச்சியானது அதன் புரட்சிகரமான லட்சியத்தை வெளிப்படுத்தியது. இன்றைய சமுதாய அமைப்பிலேயே அதையழித்து ஒழிப்பதற்குரிய ஓர் சக்தி உருவாகி வளர்ந்து வருகின்றது என்பது மார்க்ஸ் கண்ட முடிவு. அவனது இப்புதிய தத்துவம் உலகையே ஓர் குலுக்கு குலுக்கிவிட்டது. வகுப்புப் போர்; அதாவது சமுதாயத்திலேயுள்ள பாட்டாளி மக்களுக்கும், பணக்காரர்களுக்கும் போர் நிச்சயமாக வந்தே தீரும். அதை யொத்திப்போட்டலாமே யொழியத் தடுத்து நிறுத்த முடியாது- காலால் மிதித்துக் கசக்கி வதைக்கப்படும் பாட்டாளி மக்கள் கொதித்தெழுந்து போர்முரசு கொட்டியே தீருவர். போரிலே முதலாளித் துவத்திற்கு சாவுமணியடிப்பர். வகுப்புப் பிரிவினை அதாவது ஏழை பணக்காரன் என்ற பிரிவினை அழியும். அதன் மூலம் மனித சமுதாயமே விடுதலை பெறும். சமுதாயத்தின் வளர்ச்சியைப் பற்றிய இந்தத் தத்துவங்கள் அவனது ஆழ்ந்த ஆராய்ச்சியின் முடிவுகளாகும். அவை தர்க்க ரீதியாக அமைந்துவிட்டதால் அசைக்க முடியாதவையாக நின்று நிலவுகின்றன.

மார்க்ஸ் சிந்தனையுலகில் சஞ்சரித்ததுடன் நின்றுவிட்டவனல்ல. செயலாழத்திலும் இறங்கியவன். தனது தத்துவங்களை மக்களுக்கு விளக்கி அவர்களைத் தங்களது விடுதலைப் போருக்கு ஆயத்தமாக்கினான். பல நாடுகளில் தொழிலாளர்களின் சங்கங்கள் நிறுவி அவர்களுக்குள் கட்டுப்பாட்டை வலியுறுத்தினான். அகில உலகத் தொழிலாளர் சங்கமொன்றும் நிறுவினான். முதலாளித்துவ சமுதாய அமைப்பை வேருடன் வெட்டி வீழ்த்திவிட்டுப் புதியதோர் சமுதாய அமைப்பை நிறுவத் திட்டமிட்டான். முதலாளித்துவத்தை அடித்து வீழ்த்துவது அவ்வளவு எளிதான காரியமல்ல வென்

பதை அவன் அறியாமலில்லை. இருந்தாலும் அது தகர்த் தெறியப்படவேண்டும். இல்லையேல், மானிட இனத் திற்கு விடுதலையேது? வாழ்வேது?

மார்க்சினது இம்முயற்சியைக் கண்டு கலகலத்துப் போய்விட்டது முதலாளித்துவம். மார்க்சியம் முதலா ளித்துவ ஆதிக்கத்திற்கு முற்றுப்புள்ளி வைத்துவிடு மென்பதை யுணர்ந்தனர். ஆகவே, அதை எதிர்த்துத் தீவிரமாகப் பிரசாரம் செய்தனர். ஆனால், அவர்கள் முயற்சி பலிக்கவில்லை. பொய்யும், புளுகும் சொல்லி எத்தனைகாலம் மக்களை ஏமாற்றிக்கொண்டிருக்க முடியும்? சிலரைப் பலகாலம் ஏமாற்றலாம். பலரைச் சிலகாலம் ஏமாற்றலாம். ஆனால், எல்லோரையும் எப் பொழுதும் ஏமாற்றிக்கொண்டிருக்க முடியாதல்லவா?

ஆழ்ந்த ஆராய்ச்சி, சிறந்த சிந்தனை, கடுமையான உழைப்பு, இவைகளின் மூலம பெற்ற அவனது அறிவை மிக மேலான வழியிலே உபயோகித்தான். அவனது மனிதவாழ்வு பற்றிய கருத்துக்கள் 'கம் யூனிஸ்ட் அறிக்கை' என்ற ஒரு சிறு நூலாக வெளி வந்தது. இது உலகின் தலைசிறந்த நூல்களிலொன்று! இதுதான் பொதுவுடைமைப் பிரகடனம். மானிட உரிமை யின் பிரகடனம். அகில உலகமக்களின் விடுதலை சாஸ னம். இன்பவாழ்வின் உத்தரவாதம். கொடுமையை, கொடுங்கோலை, எதிர்த்துக் கிளர்ச்சி செய்ய வன்மை யற்று, நம்பிக்கையற்று, தளர்ந்து, விழுந்து மாய்ந்து, மடிந்து வந்த மக்களுக்கு எழுந்து நிமிர்ந்து நின்று போராடும் ஆற்றலை யளித்தது! புரட்சிப் புயலுக்குப் புத்துணர்வூட்டியது. ஏக போக உரிமையாளர்கள் வஞ் சித்து அபகரித்துக்கொண்ட மானிட உரிமைகளை பிடுங்கி மக்களுக்குக் கொடுத்தது! உலகப் போக்கின்

பொது விதிகளை விஞ்ஞானரீதியிலே அலசி ஆராய்ந்து அழகாக அம்பலப்படுத்துகின்றது! உலக மக்களின் மனதிலே இந்நூல் செலுத்தும் ஆதிக்கம்போல் வேறெந்த நூலும் செலுத்தியதில்லை! இந்த நூல் மார்க்ஸினது மேதாவிலாசத்திற்கோர் எடுத்துக்காட்டு. இந்த நூல் உலகின் போக்கையே மாற்றியமைத்து விடவில்லையா? இந்த நூலின் பெயரைக் கேட்டமாத்திரத்திலேயே ஏகாதிபத்தியங்கள் கதி கலங்குகின்றன! மன்னர்கள் மருளுகின்றனர். ஏக போக உரிமையாளர்கள் இடியோசை கேட்ட நாகமெனத் துடிக்கின்றனர்! இந்த நூலுக்கு உலகின் எல்லா நாடுகளிலும் கடுமையான தடைகள் விதிக்கப்பட்டிருந்தன! அதிகார வர்க்கங்களின் முளவேலிகளைத் தாண்டி அகில உலகமும் சுற்றிவந்தது இந்நூல்! உலகில் வேறெந்த நூலும் இவ்வளவு கடுமையான தணிக்கைகளுக்காளாகவில்லை! இவையே, இந்நூலின் பெருமைக்கோர் எடுத்துக்காட்டு.

இவனது மற்றொரு சிறந்தநூல் மூலதனம் என்பது. இது இவனது சிந்தனைக்குச் சிகரம்போனறது! உலகப் பேரறிஞர்களிடையே பெருஞ் செல்வாக்கைப் பெற்றது! ஆயிரக்கணக்கான அறிஞர்கள் இவ்வறிவுக் களஞ்சியத்தைப் பொனனேபோல் போற்றுகின்றனர். இந்நூல் மனித சமுதாயத்தின் எதிர்கால இன்பவாழ்விற்கு வழிவகுத்துக் காட்டுகின்றது. அகில உலகப் பொதுவுடைமை வாழ்விற்கு உறுதியான அடிப்படையளித்து விட்டது. இந்நூல்களின் மூலம் முதலாளித்துவம் இடிந்து தகர்ந்து தரைமட்டமாகிவிடுமென அறுதியிட்டுக் கூறிவிட்டான். இவைகளை உலகிற் களித்ததின் மூலம் அவன் அழியாப்புகழ் பெற்றுவிட்டான்! உலகைக் கப்பிக்கொண்டிருந்த காரிருளைப் போக்க வழிவகுத்துவிட்டான்! அல்லலபட்டு அவதியுற்றுத் தவித்

தலையும் மனிதவர்க்கத்திற்கு அபயமளித்தவன், புத்தம் புதிய புதுமைகளைக் கொட்டிக் குவித்தவன். மானிடத் தன்மையைப் புனிதமாக்கியவன்- மனித நாகரீகத்தைப் பொன்மெருகிட்டுப் புதுக்கியவன்! மதமென்னும் மானசீக மாயத்திரையைக் கிழித்தெறிந்தவன்! பல்லூழி காலமாக அறிஞர்களின் கனவுலகிலே சஞ்சரித்து வந்த பொன்னுலக வாழ்வை இவ்வுலகிற்குக் கொண்டு வந்தவன்! அவனது சிந்தனையை வடித்துத் திரட்டி மார்க்சியமென்னும் அறிவுப்பிழம்பாக அள்ளிக் கொடுத்துவிட்டான்! மார்க்சியம் அறிவின் வற்றாத பொன்னூற்று! மனித சமுதாயத்தின் வைகறையை ஒளிபெறச் செய்யும் விடிவெள்ளி! மார்க்சியம் மனித சமுதாயத்தின் தங்குதடையற்ற வளர்ச்சிக்கு வழிவகுத்துக்கொண்டே போகின்றது! அது உலக அரசியலரங்கத்திலே தலைமையிடம் பெற்றுவிட்டது! மார்க்சியம், அறிவை, மானிட வுரிமையை, இன்பவாழ்வை அடிப்படையாகக் கொண்டது. பலர் நினைப்பதே போல் மார்க்சியம் சமுதாயத்தின் அரசியல், பொருளாதாரத் துறைகளை மட்டும பற்றிப் பேசுவதுடன் நின்று விடுவதல்ல. மார்க்சியம் மனித வாழ்வின் எல்லாத் துறைகளிலும் ஊடுருவிப்பாய்கின்றது. சுருங்கக் கூறின் மார்க்சியம் மனிதர்கள், தங்களுக்குள் ஓயாது போராடி மடிவதைத் தடுத்து, மக்களை இயற்கையுடன் போராடத் தூண்டுகின்றது! மார்க்சியம், உலக வரலாற்றிலே யோர் புதிய படலத்தைத் தொடங்கிவிட்டது!

மார்க்சியத்தை அழித்து ஒழிக்க எழுந்த பேர்கள் பல. இப் பேரிடிகளிலிருந்து மார்க்சியத்தைக் காக்க மாண்டவர்களும் பலர். மார்க்சியத்தை அழித்து ஒழிக்க முயன்ற மன்னுதி மன்னர்களெல்லாம் மண்ணைக் கவ்வினர். மார்க்சியத்தை வெட்டி வீழ்த்த எழுந்த

சென்ற உலகப் போரானது அகில வுலகையும் அதிரச் செய்ய வில்லையா? இப் போராபததிலிருந்து மார்க்சியத் தைக் காக்க அகில உலகப்பாட்டாளி மக்களும் வீறு கொண்டெழுந்தனர். கோரப் போரி லீடுபட்டனர். பேராற்றல் வாய்ந்த ஜெர்மன சேனை புறமுதுகு காட்டி யோடிற்று! மார்க்சியத்தின் முன்பு மண்டியிட்டு வணங் கிற்று. இன்று மார்க்சியம் வாகை புனைந்து வர்ன வீதி யிலே பவனிவருகின்றது. மார்க்சியத்தின்வெற்றி அகில வுலகப் பாட்டாளி மக்களின் வெற்றி யல்லவா? இதைக் கண்டு முதலாளித் துவம் சகித்துக் கொண் டிருக்குமா? அய்யோ! பாவம்! மலைக்கின்றது; மருளுகின்றது. மறு படியும் போருக்கு ஆயத்தமாகின்றது! மின்னல் வேகத்தில் போர்க் கருவிகள் செய்து குவிக்கப்படு கின்றன! வானிலே யுத்த மேகங்கள் சூழுகின்றன! போரின் நச்சுக் காற்று வீசுகின்றது! இன்றில்லை யேல் நாளை, நாளையில்லையேல் மற்றொரு நாள், போர் நிச்சயம் வந்தே தீரும்! இனி நடக்க விருக்கும் போரிருக்கின்றதே அது போராக இராது! அது ஊழிக் காலத்தீ யென்று சொல்லுவார்களே அந்த நிலையிலே தான் நடைபெறும்! அடுத்து வருங்காலமிருக்கின்றதே அது மார்க்சியத்திற்குப் பெருஞ் சோதனை காலமாகும்! இப் பேரிடியிலிருந்து மார்க்சியத்தைக் காக்க எண்ணற்ற இளங்காளைகள் கிளம்பி விட்டனர். உலக முழுதும் இரத்த வெள்ளம் வழிந்தோடும்! பிணமலைகள் குவியும்! போரின் பேரிடி அண்டங்களையும் அதிரச் செய்யும்! மார்க்சியத்தின் மாண்பைக் கண்டீர்களா? அதை அழித் தொழிப்பதற்கு அகில வுலகையும் திரட்டி யெழுப்பு கின்றது முதலாளித்துவம்! என்ன கொடுமை! என்ன அநீதி! உலகின் பிற்போக்கு சக்திகளின் இவ்விபரீதப் போக்கைக் கண்டு அறிஞர்கள் திகைக்கின்றனர். எதிர் காலம் இருள் சூழ்ந்து விட்டது. அதோ! போர் முரசு முழங்குகின்றது!

# 3

நமது நாட்டில் இன்று மக்கள் படும் அல்லல்களுக்கும், அவதிகளுக்கும் அளவேயில்லை. இன்றைய சமுதாய அமைப்பின் கோரப் பற்கள் மக்களின் குரல் வளைகளைக் கவ்விக் கொண்டிருக்கின்றன. நமது அடிமைத் தனத்திற்கும், அநாகரீகவாழ்விற்கும் காரணம் நமது சமுதாய அமைப்புத் தான். பழமையின் ஆபாசத்திலே ஊறியுழன்று புழுத்து நாறிக் கிடக்கின்றது நமது சமுதாயம். நமது சமுதாய அமைப்பின் சட்ட திட்டங்களும, ஒழுக்க முறைகளு மிருக்கின்றனவே, அவற்றை விடக் காட்டுமிராண்டித் தன்மானவைகளை, உலகில் வேறெந்த நாட்டிலுங் காண்பதரிது. பிறப்பிலே பேதங் காட்டி மக்களை நாயினும் கடையாக நடத்துகின்றோம். இந்த அநியாயம் வேறெங்கேனும் முண்டோ? மற்றும் மக்களின் பரிதாபகரமான நிலைமையைப் பாருங்கள். கோடிக் கணக்கான மக்களுக்கு உண்ண உணவில்லை; உடுக்க உடையில்லை. குடியிருக்கக் குடிசையில்லை. எங்கும் வறுமை! பயங்கர வறுமை! எங்கும் அமைதியின்மை. எத்தனை நாட்களுக்கு இந்த அவதிகளில் உழன்று அல்லற் படுவது? துன்பத்திற்கு மோர் எல்லையில்லையா? நாட்டிலின்று எங்கு நோக்கினும் குழப்பம. உண்ண உணவு தேவையென ஆர்ப்பாட்டம். உடுக்க உடை வேண்டுமெனற கிளர்ச்சி குடியிருக்கக் குடிசை வேண்டுமென்ற கூக்குரல். பிறப்பிலே பேதங்காணல் கூடாதென்ற அமளி. இமய முதல் குமரிவரை இதே நிலை.

நாட்டில் நிலவும் இப்பயங்கர நிலைக்குக் காரணம் அந்நிய ஆட்சிதானும். அந்நிய ஆட்சி மலையத்தனை

திமைகளை நல்கியுள்ள தென்பதை நாம் அறியாமலில்லை. இருப்பினும் ஓராயிரம் ஆண்டுகளாகவே நம் நாடு இந்த அலங்கோல நிலையிலே தானிருந்து வருகின்றது. இதற்கு மூல காரணம் என்ன தெரியுமா? நம் நாட்டு சமுதாய அமைப்புத்தான். சமுதாயத்திலே பல பெரும் பிளவுகள். மக்களிடையே மனிதன் நினைக்கவும் முடியாத அவ்வளவு ஏற்றத் தாழ்வுகள் நிலவின. இக் கொடுமைகளுக்காளாகித் தவித்து வந்த மக்களுக்கு அந்நியர் வரவு சற்று ஆறுதலளித்தது. தங்களை அவதிப் படுத்தி வந்தோரின் ஆதிக்கத்தை யொழிக்க அந்நிய னுக்கு ஆதரவு தந்தனர். அதனால் தான் இந் நாட்டிற்கு வந்த அந்நியர் யாவரும் சுலபமாகக தங்களாதிக் கத்தை நிலைநாட்ட முடிந்தது. இதுதான் உண்மை. இல்லையேல், பரந்து விரிந்து பல கோடி மக்களைக் கொண்ட நாட்டை ஆயிரக் கணக்கான மைல்களுக் கப் பாலுள்ள ஆங்கிலேயர்கள் வென்று, அடிமை கொண்டு விட முடியுமென நினைக்கின்றீர்களா? ஆகவே நாட்டின் இன்றைய இழிநிலைக்குக் காரணம் அந்நிய ஆட்சியல்ல. நம் சமுதாய அமைப்புத்தான் காரணம. இதைத் தகர்த் துத் தரை மட்டமாக்கிவிட்டுப் புதிய சமுதாய அமைப்பை நிறுவினலொழிய இந்த நாட்டு மக்களுக்கு வாழ்வில்லை, இந்த நாட்டிற்கு வளமில்லை.

பெரும்பாலான மக்களின் வருவாயோ மிக மிகக் குறைவானது. இந்த சொற்ப வருமானத்தைக் கொண்டு எப்படி வாழ்க்கையை நடத்துவது? எந்த வகையிலே குடும்பத்தைக் காப்பது? மானமுள்ள மனிதன் எவ்வளவு காலம் இக் கொடுமைகளைச் சகித்துக் கொண்டு வாழ முடியும? ஒன்று வாழ்வை மேம்பா டடையச் செய்யப் போராடிடிய வேண்டும். இல்லையேல் வாழ வகையினறி மடிய வேண்டும் என்ற நிலையேற்

பட்டுவிட்டது. எது எப்படியிருப்பினும் பல கோடி மக்களை இப்படித் தவிக்க விட்டுக் கொண்டிருப்பது பேரா பத்தை விளைவிக்கும்.

அந்நிய ஆட்சியொழிந்துவிட்டால் நாட்டைப் பிடித்திருக்கும் பீடைகள் யாவுமொழிந்து விடுமெனப் பேசப்பட்டு வந்தது. அந்நிய ஆட்சியும் தொலைந்து விட்டது. நாடு விடுதலை பெற்று விட்டது. ஒரு நாடு அந்நிய ஆதிக்கத்திலிருந்து விடுபட்டு விட்டதனாலேயே எல்லாம் சரியாகி விடுமா? இல்லை. அந்நிய ஆட்சி அழிதல் மட்டும் போதாது. ஏனெனில் ஒரு நாட்டை அந் நாட்டவரே ஆள்வதனாலேயே அந்நாட்டு மக்கள் யாவரும் சுகமாக வாழ்ந்து விட முடியுமா? நமக் கடுத்துள்ள சீனாவைப் பாருங்கள். சீனாவை சீன மக்கள் தான் ஆளுகின்றனர். சீனா சுதந்திர நாடுதான்; அதுவும் பல நூற்றாண்டுகளாக இருந்துமென்ன? இன்னும் அந்த நாட்டிலே அறியாமைதான் ஆட்சி புரிகின்றது. பஞ்சமும், பிணியும் மக்களை வாட்டி வதைக்கின்றன. பல கோடிக் கணக்கான மக்களுக்குக் கல்வி யறிவேயில்லை. பல்லாயிரக் கணக்கான மக்களுக்கு உண்ண உணவில்லை; உடுக்க உடையில்லை; இருக்க இடமில்லை. ஆண்டு தோறும் ஆயிரக் கணக்கான மக்கள் நகரங்களின் தெரு வோரங்களிலே மாண்டுகிடப்பாராம! இது சுதந்திர சீனத்தின் அன்றாட நிகழ்ச்சி. மற்றும் ஜெர்மனியையும், ஜப்பானையும், இத்தாலியையும் பாருங்கள். அவை யாவும் சுதந்திர நாடுகள்தான். ஆனால் இன்று அந்நாடுகளின் நிலைமையென்ன? அந்த நாட்டு மக்களின் கதியைக் கண்டீர்களா? மற்றும் உலக மக்களின் உதிரத்தை உறிஞ்சி வாழும் ஆங்கிலேயர்களின் நாட்டையெடுத்துக் கொள்ளுங்கள். அங்கும் வேலை யில்லாத் திண்டாட்டமும், வீடின்மையும், வறுமையு மிருந்துதான்

வருகின்றன. எடுத்துக் கொள்ளுங்கள், 'குபேர' சம்பத்திலே புரளுவதாகச் சொல்லப்படும் அமெரிக்காவையே. அங்கு மட்டும் என்ன வாழ்கின்றது? மலையொத்த செல்வம் சிலரிடம்; வறுமை பலரிடம். விண்ணை யிடிக்கும் வீடுகளிலே வாழ்வோர் ஒரு புறம். குச்சு வீடுகளி லுழலும் கூட்டம் ஓர் புறம். அங்கும் மக்களிடையே துன்பமும், துயரமும், வேலை நிறுத்தங்களும் மலிந்துதான் இடக்கின்றன. மேலே சொன்ன அத்தனை நாடுகளும் சுதந்திர நாடுகள் தான். அந்த நாடுகளை அந்நாட்டு மக்கள்தான் ஆளுகின்றனர். இருந்தும் அந்நாட்டு மக்களிடையே இன்பமில்லை. எழிலில்லை. நல்வாழ்வில்லை. ஆகவே, ஒரு நாட்டை அந் நாட்டவரே ஆள்வதனாலேயே அந்நாட்டு மக்கள் யாவரும் சுகமாக வாழ்ந்து விட முடியாதென்பது தெளிவாகி விட்டதல்லவா?

நம் நாட்டு மக்கள் யாவரும் சுதந்திரம் பெற்று இன்பமாக வாழ வேண்டுமானால், அந்நிய ஆட்சி யழிந்தால் மட்டும் போதாது. அந்நிய ஆதிக்க மழிந்ததாலேயே மக்களின் அடிமைத் தனம் அழிந்து விடாது. மடமை மாய்ந்து விடாது. வறுமை யொழிந்து விடாது. செல்வங் குவிந்து விடாது. ஆளுவோர் மாறினால் போதாது. ஆட்சி முறை மாற வேண்டும். இன்றைய சமுதாய அமைப்பையே தகர்த்து விட்டுப் புதிய ஓர் சமுதாயத்தை நிறுவ வேண்டும். பொருளாதார அமைப்பையும் புதுப்பித்தல் வேண்டும். பல கோடி மக்கள் உழைத்து உற்பத்தி செய்யும் செல்வம் ஒரு சிலரிடம் போய்க் குவியும் இந்த அநியாயம் மாற வேண்டும். அது மட்டும் போதாது. நமது வாழ்க்கை முறையிருக்கின்றதே, அதிலே ஓர் மாற்றமும் தேவை. அந்த மாற்றம் சுதந்திரம் பெற்று விட்டதனாலேயே ஏற்பட்டு விடாது. நமது வாழ்வு நவநாகரீகமானதாக இருக்கவேண்டு

மானல், நமது வாழ்க்கைத் தத்துவங்களையே மாற்றியமைத்தல் வேண்டும். பழமையின் இருள் படிந்த வாழ்க்கைத் தத்துவங்களை யெல்லாம் ஒதுக்கித் தள்ளிவிட்டு காலத்திற்கும், கருத்திற்குமுகந்த புதிய தத்துவங்களைப் புகுத்தவேண்டும். இல்லையேல் நமது அடிமை மனப்பான்மையழியாது. அதன் காரணமாக நமது முன்னேற்றம் தடைபடும். இவ்வுண்மையையுணர்ந்து நமது நாட்டிற்கோர் தத்துவப்புரட்சி தேவையென்பதை வலியுறுத்துபவர் அறிஞன் எம். என். ராய்தான். ராய் சிறந்த சிந்தனையாளன் மட்டுமல்ல. தேர்ந்த தத்துவஞானியுங்கூட. தமது நீண்ட அரசியல் அனுபவத்தின் மீது கண்டறிந்த உண்மையை வலியுறுத்துகின்றான். காட்டுமிராண்டித்தனமாக வாழ்ந்துவந்த மக்களுக்கு நவநாகரீகமாக வாழவழி வகுத்துத்தந்தவன் கார்ல்மார்க்ஸ். அவனுக்குப்பின் அவனது வழியைப்பின்பற்றி மக்களை இன்ப உலகிற்கழைத்துச் செல்பவன் எம். என். ராய்தான். மார்க்சினது தத்துவங்களை அலசியாராயும் மேலைநாட்டறிஞர்களுக்கு ராயைப்பற்றி நனகுதெரியும். அவர்களிடையே தோழர் ராயின் எண்ணங்களுக்கோர் தனிமதிப்புண்டு. இவனது அரசியல், பொருளாதார, சமுதாய ஆராய்ச்சியின் முடிவுகள் உலகப்பிரசித்தமானவை. இருபதாம்நூற்றாண்டின் தலைசிறந்த அறிஞர்களிலே ராயும் ஒருவன் எனபதை அறிஞருலகம் ஒப்புக்கொண்டுவிட்டது.

நமது இன்றைய வாழ்க்கைமுறையானது மதக்கொள்கைகளை அடிப்படையாகக்கொண்டிருக்கின்றது. மதக்கொள்கைகளோ மனிதனின் அறிவு விரிவுபெறாத அந்தக்காலத்திலேற்படுத்தப்பட்டவை. அந்த அநாகரீக காலத்திலே இத்தகைய கொள்கைகள் மனித வாழ்விற்கின்றியமையாதனவாகவிருந்திருக்கலாம். அதைப்

பற்றி நாம் குறைகூறவில்லை. ஆனால் காலத்திற்குத்தக்க வாறு வாழ்க்கைமுறையை மாற்றியமைத்துக்கொள்ள வேண்டாமா? அத்தகைய மாற்றங்கள்தானே மனித முற்போக்கிற்கு வழிவகுக்கின்றன. ஆனால், நம்நாட்டு மதங்கள் இன்னும் பழங்காலக்கொள்கைகளிலே தேங்கிக் கிடக்கின்றன. அதை நம்பிவாழும் மக்களின் வாழ்வும் பாழ்பட்டுவிட்டது. இன்றைய மதக்கொள்கைகள் மனித முற்போக்கிற்குப் பெருந்தடையாகிவிட்டன. மதங்களின் எல்லையற்ற ஆதிக்கம் மக்களை மடையர்களாக்கிவிட்டது எங்கும் அநாகரீகம் மலிந்துவிட்டது. மனிதத்தன் மையை மக்களிடையே மருந்துக்குக்கூட காணோம். இதை யறிந்துதான் "மதம் மக்களுக்கு அபினி" போன்றது என்றான் மார்க்ஸ்.

உழைப்பாளிகளை ஏமாற்றி அவர்களது உழைப் பின்பயனை ஒருசிலர் உறிஞ்சிவாழ்வதற்கு மதம் ஒரு சிறந்த சாதனமாக ஆக்கப்பட்டுவிட்டது. மதத்தின் பேரால் மக்களுக்கிழைக்கப்படும் அநீதிகளுக்களவே யில்லை, இந்திய முதலாளித்துவம் மதங்களின் மகேசச் சாதிகாரத்தை நன்குணர்ந்து கொண்டது. அதன் கார ணமாகத்தான் நாட்டின் இன்றைய அரசியல் கட்சிகள் யாவும் மதங்களின் அடிப்படையிலே அமைக்கப் பட் டிருக்கின்றன. அரசியல் அதிகாரத்தைக் கொண்டு மக்களை அதிக நாட்கள் அடக்கி ஆதிக்கஞ் செலுத்திக் கொண்டிருக்க முடியாது. ஆனால், மதத்தின் பேரால் சுலபமாக நம் மக்களை மயக்கி சுரண்டிப் பிழைக்கலா மல்லவா?

"ஏழையாக வாழ்வதுதான் சிறந்தது. அதுதான் முக்திக்கு மார்க்கம்" என்று மதம் புகலுகின்றது. ஏழைகளுக்கு வானுலக வாழ்வின் மீது மோக மூட்டி உலக வாழ்வின்மீது அவர்களின் எண்ணங்கள்

படியாதபடி காவல்புரிகின்றது! மக்கள் யாவரும் தமக் கென வாழாப்பிறர்க்குரியாளராக வாழவேண்டுமென்று மதங்கள் ஓயாது ஓலமிடுகின்றன. அதன் பொரு ளென்ன? ஏழைகள் யாவரும் தங்களது நலன் கருதாது பிறர் நலன், அதாவது செல்வவான்களின் நல னுக்காக வாழவேண்டுமென்பதுதானே. இன்று நடை பெறுவதும் அப்படித்தான். எவ்வளவு சாதுர்யமான செய்கை பார்த்தீர்களா? ஏழையாக வாழ்வது உண்மை யாகவே மகத்துவமுடையதாக விருப்பின் எந்தப் பணக் காரனாவது பணத்தைச்சிக்கெனப் பிடித்துக் கொண் டிருப்பானென்ன நினைக்கின்றீர்களா? வறுமைக்குப் பெருமை கொடுத்துப் பேசுவதெல்லாம் பணக்காரர் களின் சூழ்ச்சிகள். இவற்றையுண்மையென நம்பி மக் கள் தங்களது நலனுக்காக வாழ்தல் பாவமெனவெண்ணி மருளுகின்றனர். மதங்களின் புனிதமான பொன்னுரைக ளெனப் போற்றிப் புகழ்ந்து உங்களுக்குப் பள்ளியிலே போதிக்கப்படும் "பொறுமை கடலினும் பெரிது" "அடக்கம் ஆயிரம் பொன்பெறும்" "போதுமென்ற மனமே பொன் செய்யுமருந்து" என்பனவற்றை என்ன வென நினைக்கின்றீர்கள்? உலகில் தோன்றிய அறிஞர் கள் யாவரும் இந்தப் போலிப் பொன்னுரைகளைக் கடைபிடித்து வாழ்ந்துபோயிருப்பின் இன்று நாம் எந்த நிலையிலிருப்போம் தெரியுமா? வீட்டில் விளக்கேற்று வதற்குக்கூட இன்னும் 'சக்கிமுக்கி' தட்டும் நிலைமை யிலேதானிருப்போம். அடக்கம், நிதானம், பொறுமை, மன்நிறைவு இவையாவும் வடிகட்டிய அடிமைத்தனத் தின் சின்னங்கள். இவையாவும் நம்மவர்களது ஆசை உணர்ச்சி, ஊக்கம், இவைகளையடக்கி யொடுக்கி அடிமை களாக்கி விட்டன.

நமது இன்றைய வாழ்க்கைத் தத்துவங்கள்தான் நம்மைப் பாழ்படுத்திவருகின்றன. நமது தத்துவ ஞானிகள் நமக்குப் பொறுப்பை ஊட்டத் தவறிவிட்டனர். "எல்லாம் அவன் செயல்" என்ற சோம்பேறி வேதாந்தம் நம்மவர்களைப் பொறுப்பற்றவர்களாக ஆக்கிவிட்டது. பொறுப்பை யுணராத நாம் எதற்குத் தகுதியானவர்களென்ன நினைக்கின்றீர்கள்? நம்மை நாமே காத்துக் கொள்ளும் பொறுப்பைக்கூட இழந்துவிட்டோம்! இவ்வளவு பொறுப்பற்ற நாம் நம் நாட்டை மட்டும் எப்படிக் காக்கமுடியும்? அதனால்தான் நாம் அடிமைகளாகி அவதிப் படுகின்றோம். இந்தச் சோம்பேறி வேதாந்தத்தின் தீமை இத்துடன் நின்றுவிடவில்லை. உழைப்பின் திறனை நம்மவர் உணரமுடியாது செய்து விட்டது. உழைப்பின் திறனை, பெருமையை, உணராதவர்களுக்குத் தன்னம்பிக்கையேது? தன்னம்பிக்கையில்லாதவன் உலகில் எதையாவது சாதிக்கமுடியுமென நினைக்கின்றீர்களா? பொறுப்பும் தன்னம்பிக்கையுமில்லாதவன் அடிமையாக வாழ்வதைவிட வேறென்ன செய்யமுடியும்? பொறுப்பு, தன்னம்பிக்கை, உழைப்பின்மேன்மை ஆகிய இவைகளையுணர முடியாத மக்களைப் பார்த்து "என்ன சோம்பேறிகள் இவர்கள்!" என்று பிறநாட்டவர்கள் எள்ளி நகையாடமாட்டார்களா? இதை எப்படிச் சகித்துக் கொள்ளுவார்கள் இந்தச் சோணகிரிகள்? அவர்களிடமிருந்து தப்பித்துக்கொள்ள ஒரு யுக்தி செய்தார்கள்; "அவனன்றி யோரணுவும் அசையாது"! என்று தங்களுக்குச் சாதகமான மற்றோர் தத்துவத்தையும் வகுத்துக் கொண்டனர். என்னே இவர்கள் தம் அறியாமையின் பெருமிதமிருந்தவாறு!

உலகிலுள்ள எதன்மீதும் பற்றில்லாது வாழவேண்டுமென்று நமது தத்துவ ஞானிகள் புகலுகின்றனர்.

அவர்கள் சொற்படி வாழும் நமக்குச் சுதந்திரவாழ்வின் மீதும் பற்றிருக்க முடியாதல்லவா? அதனால்தான் நாம் அடிமைகளாக வாழ்கின்றோம் இன்றைக்கும்! ஆங்கில ஆட்சியழிந்துங்கூட நமது அடிமைத்தனம் அழியவில்லை. இதுவரை அந்நியனுக்கு அடிமை. இப்பொழுது நம்மவனுக்கடிமை. ஆளுவோர் மாறினார்களேயன்றி நமது அடிமைத்தனமழியவில்லை!

உலகில் மனிதனாகப் பிறப்பதும் வாழ்வதும் பெருமை படக்கூடிய விஷயமல்லவா? நாம் சிறப்பாக வாழ்வதன் மூலம் நம் நாட்டவருக்கு மட்டுமல்லாது உலகிற்கே பெருமைதேடித் தரலாம். அப்படி வாழ்வது தான் வாழ்வு. ஆனால் நாம் எப்படிவாழ வேண்டுமென்று நம்மதங்கள் போதிக்கின்றன தெரியுமா? "வாழ்வாவது மாயம்" அதனால் உலகவாழ்வை வெறுத்துப் புறக்கணியுங்கள் என்று ஓயாது ஓலமிடுகின்றன. கற்பனையான வானுலக வாழ்வை நம்பி இப் பொன்னுலக வாழ்வைத் துறக்கும்படி யிடைவிடாது தூண்டுகின்றன, அவர்களது கூற்றை யுண்மையென நம்பி வாழும் நாம் இலவு காத்த கிளியாகின்றோம். அதுமட்டுமல்ல அடிமைகளுமாகிறோம்.

ஆண்களைத்தான் இம்படிக் குட்டிச் சுவர்களாக்கி விட்டார்களே, பெண்களுக்கேதாவது வாழ்வுண்டா? இந்த நாட்டிலே யென்று பார்த்தால் அதுவுமில்லை. நம் நாட்டுப் பெண்களின் நிலைமை பற்றி நினைக்கவும் நெஞ்சம் பதறுகின்றது! நமது தத்துவ ஞானிகள் பெண்களைப் புழுக்களாகக் கூட மதித்தார்களில்லை! பெண்களை ஆண்களின் தட்டுமுட்டு சாமான்களிலொன்றே போல் கருதி வந்தனர்! ஆண்கள் விரும்பினால் தங்களது பொருள்களை விற்பதே போல் இவர்களையும் விற்றுவிடலாம். பெண்களை வைத்து வியாபாரம் நடத்த

லாம்! இது இன்றும் இந்த நாட்டிலே சர்வசாதாரண மாக நடைபெறுகின்றது! பெண்ணினம் இந்தச் சோகக் சுழலிலே சிக்கிப் புலம்பித் தவிக்கும் இந்த நாடு ஈடேற முடியுமென நினைக்கின்றீர்களா? முடியவே முடியாது. பெண்களில்லையேல் வாழ்வேது? உலகந்தானேது? இன்பவாழ்விற்கும், நாட்டின் புகழுக்கும், கீர்த்திக்கும் காரணமான பெண்ணினம் அடிமைகளுக் கடிமைகளாக வாழும் நாடு காட்டாட்சியளிப்பதில் என்ன புதுமை யிருக்கிறது? நம்து வாழ்வைப் பாழ்படுத்தி வரும் இவ் விபத்துக் களஞ்சியங்களை யொழிக்கவேண்டும். பேரறிஞன் மார்க்சினது தத்துவங்களைத் தழுவிப் புது வாழ்க்கை முறையை யமைக்கவேண்டும்.

உலகின் தத்துவ ஞானிகளிலே தலைசிறந்தவன் கார்ல்மார்க்ஸ். இவனது அதீதமான தத்துவங்கள் மக்களை இன்பவுலகின் தலைவாயலுக்கழைத்துச் சென்றுவிட்டன. மனிதனாகப் பிறந்த எவருக்கும் இவ்வுலகில் இன்பமாக வாழ உரிமையுண்டு. ஏழை எளியவரெனப் பாகுபடுத்தி இன்ப வாழ்வை மறுப்பது இயற்கைக்கு மாறுபட்டது என்று எந்த மதமாவது புகலுகின்றதா? அல்லது எந்தத் தத்துவ ஞானியாவது கூறினதுண்டா? இல்லவேயில்லை. இப்பொன்னுரை புகன்றவன் மார்க்ஸ் ஒருவன்தான். அதற்கு வழியும் வகுத்துக் கொடுத்துவிட்டான். நமது தத்துவ ஞானிகளின் வாழ்விற்கொவ்வாத வரட்டுத் தத்துவங்கள் போன்றதல்ல இவனது தத்துவங்கள்.

இனி நம் நாட்டு இலக்கியத்திற்கு வருவோம். இலக்கியமென்பதென்ன? கலையென்பதென்ன? அவற்றிற்கும் மனித வாழ்விற்குமுள்ள தொடர்புகளென்ன? என்பன போன்றவற்றைப்பற்றி நாம் கவலைப்படுவதேயில்லை. கலையாக விருப்பினுஞ்சரி அது இலக்கிய

மாக விருப்பினுஞ்சரியே மனிதமுற்போக்கிற்கவ்சியமளிப்பதாகவிருக்கவேண்டும். மக்களை யவர்களது மூடக் கருத்துக்களிலிருந்தும், பழமையின் பிடியிலிருந்தும் மீட்டுத் தாருக எதையும் ஆராய்ந்தறியும் ஆற்றலையளிப்பதாக விருக்க வேண்டும். 'நமது இன்றைய வாழ்க்கை நிலையை அப்படியே தீட்டிக் காட்டுவதுதான், வாழ்வின் இன்பத்தையும், துன்பத்தையும், வாழ்விலே நிகழும் புயலையும், அமைதியையும், படம் பிடித்துக் காட்டுவதுதான் இலக்கியம்' என்பது பெரும்பாலோரின் கருத்து. அதுவல்ல இலக்கியத்தின் பணி. அதுவல்ல இலக்கியத்தின் நோக்கம்.

இலக்கியத்தின் பெருமை, அதன் தொன்மையிலும், இனிமையிலும், நயத்திலும் பொதிந்து கிடப்பதாகக் கருதப்பட்டு வருகின்றது. அது தவறு. இலக்கியத்தின் பெருமை மக்களின் வாழ்வை வளப்படுத்துவதைப் பொருத்திருக்கின்றது. அதன் சிறப்பு மக்களின் மனதிலே புதுக்கருத்துக்களையுருவாக்கி, வாழ்வை நவநாகரீகப்படுத்தும் ஆற்றலைப்பொறுத்திருக்கின்றது. பிரான்சு நாட்டின் இலக்கியத்தைப் பாருங்கள். வால்டேரின் 'பகுத்தறிவும்' ரூசோவின், 'சமுதாய ஒப்பந்தம்' 'எமலி' போன்ற நூல்களும் அந் நாட்டு மக்களின் மனவிருளைப்போக்கின. அவர்களது வாழ்விலே புரட்சிகரமான மாற்றத்தைப் புகுத்தின. அந்த அதிர்ச்சியானது உலகின் மற்றெல்லா நாடுகளையும் தாக்கியது. இலக்கிய ஆசிரியன் வெறும் நூலாசிரியன் மட்டுமல்ல. மக்களது வாழ்வை வளமாக்கும் கலைப் பண்பு கொண்டவன்.

நம் நாட்டு இலக்கியம், கலை, முதலியன எந்த நிலையிலிருக்கின்றன வென்பதைச் சற்று சிந்தியுங்கள். இலக்கியத்திலும் சரி, கலைகளிலும்சரி நம்மவர்கள் அமைப்

பிற்கே முக்கியத்துவங் கொடுக்கின்றனர். கருத்தைப் பற்றி அவர்கள் கவலைப்படுவதேயில்லை! எதையும் அழகாக எடுத்துச் சொல்லிவிட்டால் போதும், அதுவே சிறந்த கலையாக, இலக்கியமாக அமைந்து விடுகின்றதென்பது அவர்களது முடிவு! "கலை கலைக்காகவே" என்ற சொல்லானது அவர்களது கருத்திற்கு அரண் செய்கின்றது. கலைகளிலாகட்டும், இலக்கியத்திலாகட்டும் அமைப்பைவிடக் கருத்துத்தான் முக்கியமானது. இலக்கியத்திலும் கலைகளிலும் பொதிந்து கிடக்கும் கருத்தைப் பொருத்தே அந்நாட்டு மக்களது வாழ்வும் தாழ்வுமிருக்கும். பிற நாட்டு இலக்கியங்கள், உருவாகி வருவதற்கு முன்பே, தமிழிலக்கியம் ஓரளவுக்குச் சிறந்து விளங்கியது. ஆதலால், அக்கால தமிழன் வாழ்வும் மற்ற நாட்டவரது வாழ்வைவிட சிறப்புற்றிருந்தது. ஏறக்குறைய அதேகாலத்தில் கிரேக்க இலக்கியமும் சிறந்து விளங்கியது எனலாம. அதன் காரணமாகக் கிரேக்க நாகரீகமும் வலுத்து நின்றது. பதிமூன்று பதினான்காம் நூற்றாண்டுகளிலே ஸ்பெயின் தேசத்து இலக்கியம் வளர்ந்து வளம் பெற்றது. அதன் காரணமாக ஸ்பானிய ஆதிக்கம் வலுத்திருந்தது. பதினைந்தாம் நூற்றாண்டிலே இத்தாலிய இலக்கியம் சிறந்து விளங்கியது. அதனால், இத்தாலிய ஆதிக்கம் பெருகிவந்தது. 17 ம் நூற்றாண்டிலே பிரான்ஸ் நாட்டின் இலக்கியமானது கிரேக்க இலக்கியத்தைத் தழுவிப் புகழேணியில் ஏறியது. உலக அரங்கத்திலே பிரான்சு நாடும் தலை சிறந்து விளங்கியது. அந்நாட்களிலே இங்கிலாந்து முதல் ருஷ்ய நாடுவரை பிரானசின் இலக்கியத்திற்குத் தலை வணங்கின. அக்கால ஐரோப்பிய நாடுகளிலே பிரான்சு நாட்டின் மொழியைப் பேசுவதையும், படிப்பதையும் பெருமையாகக் கொள்ளப்பட்டது. பத்தொன்பதாம்

நூற்றாண்டிலே ஆங்கில இலக்கியமும், ஜெர்மன் இலக்கியமும், பிரான்சு நாட்டின் இலக்கியத்தைப் பின் பற்றின. அதற்கேற்றவாறு அந் நாட்டு மக்களது ஆதிக்கமும் வளர்ந்தது. இந்த நூற்றாண்டிலே ருஷ்ய நாட்டிலக்கியம் புகழ்வானிலேறிவிட்டது! அதற்கீடும் எடுப்பும் கொண்ட இலக்கியம் வேறெந்த நாட்டிலு மில்லை! அதற்குத் தக்கவாறு அவர்களது வாழ்வும் நவநாகரீகம் பெற்று விட்டது. ஆகவே, இலக்கியத்தி லும், கலைகளிலும் பொதிந்து கிடக்கும் கருத்துக்கள் தான் மனித வாழ்விற்கும் அவனது தாழ்விற்கும் காரணமேயல்லாது அவைகளின் அழகும், இனிமை யும், அமைப்புமல்ல. இலக்கியத்திற்கும், மனிதவாழ்விற் கும் நாம் நினைப்பதைவிட நெருங்கிய தொடர்பிருக் கின்றது.

மார்க்சியத்தின்படி இந்த இலக்கியமென்பது வாழ்வை வளமாக்க வழி வகுப்பதாக இருக்கவேண்டும். மனிதனின் அறிவை விரிவுபடுத்தி, ஆற்றலைப்பெருக்கி, அவனது சிருஷ்டித்திறனை அதிகப்படுத்துவதாக இருக்கவேண்டும். அவனது சிருஷ்டி சக்தியானது பெருகப் பெருக வாழ்வு, வளம் பெற்றுக்கொண்டே போகுமல்லவா? நம் நாட்டிலக்கியத்திலே இத்தகைய நூலேதேனுமுண்டா கூறுங்கள் தோழர்களே. அது எத்தனை பழமையானதாக விருப்பினும் சரியே, அது எவ்வளவு மகத்துவம் பொருந்தியவரால் எழுதப்பட் டிருப்பினும் சரியே அது பற்றி நமக்கு அக்கரையில்லை. அதை மார்க்சியமென்னும் உறைகல்லிலுறைத்துப் பாருங்கள். சமுதாய முன்னேற்றத்திற்கு வழி வகுக்காத நூல்களைப் புறக்கணியுங்கள். அவை நமக்குத் தேவை யில்லை.

நம்நாடு இலக்கியத்துறையிலும் மிக இழிவான நிலைமையிலிருக்கின்றது. இது பற்றி நாம் வெட்கப்பட வேண்டியதில்லை. மேலை நாட்டு இலக்கியங்களும் ஒரு காலத்திலிதே நிலையிலிருந்திருக்கின்றன! சென்ற மூன் ஞூருண்டுகளுக்கு முன்புதான் மேல்நாட்டவர் இலக்கி யத்தைப் புதுக்கோணத்திலிருந்து பார்க்க ஆரம்பித் தனர். அது முதல், தேவனையும் தேவலோகத்தையும் விட்டுத் தங்களையும், தாங்கள்வாழும் உலகையும் பார்க்க ஆரம்பித்தனர். இலக்கியத்தைப்பற்றி மேலைநாடு சொல் லும் கதையிதுதான். சென்ற மூன்ஞூருண்டுகளாக அங்கு அறிவிற்கும் அறியாமைக்கும் போர் நடந்தது. அறிவு வென்றது. அறியாமை தோற்கடிக்கப்பட்டது. அதன் காரணமாக ஐரோப்பிய சமுதாயம் முன்னேறு கின்றது. இதைத்தான் மறு மலர்ச்சிக்காலம் என்பர் வரலாற்று ஆசிரியர்கள். இந்த மறுமலர்ச்சிக்காலத் திலே எண்ணற்ற புரட்சிகள் எழுந்து மறைந்தன. பிரான்ஸ் நாட்டிலும், ருஷ்ய நாட்டிலும் தோன்றி வீசிய பயங்கரப் புரட்சிப்புயல்கள் மனிதன் சிருஷ்டித்தவை தான்! அவை தெய்வங்களின் தூண்டுதலால் ஏற்பட் டவை யல்ல. இருப்பினும் அவைகளிலே வெற்றி கண்டு அந்நாடுகள் முன்னேறுகின்றன. பிரான்சிலே நடந்த புரட்சி மனிதனின் மனக்கண்ணைத் திறந்துவிட் டது. புது விழிப்புப்பெற்றனர் மக்கள். 'அவனன்றி அணுவு மசையாது' என்ற சோம்பேறி வேதாந்தம் அடித்து வீழ்த்தப்பட்டது. மனித வாழ்விற்கும், தாழ் விற்கும் மனிதனே தான் காரணமென்பதை மக்கள் உணர்ந்தனர். இவ்வுணர்வு தன்னம்பிக்கையை யூட் டியது. புது யுகம் பிறந்தது. இந்த நூற்ருண்டில் நடந்த ருஷ்யப்புரட்சி இப் புதிய தத்துவத்திற்கு ஆக் கந் தேடிக்கொடுத்துவிட்டது. ஆனால் இன்று நம் நாட்

டின் நிலைமையென்ன? இங்கே ஒவ்வொரு போராட்ட மும் அந்தராத்மாவின் ஆசியின் மீதே ஆரம்பித்து நடத்தப்படுகின்றது! இருந்தும் அவைகளின் கதி யென்ன? தோல்வி, படுதோல்வி. இந்தத் தோல்வி யையே வெற்றியாகக்கொண்டு வீண் ஆரவாரம் செய் கின்றோம். என்னே நம் அறியாமையின் பெருமித மிருந்தவாறு!

# 4

மனித சமுதாய வரலாற்றை அடிமுதல் நுனி வரை விஞ்ஞான ரீதியிலே ஆராய்ந்தறிந்தவன் மார்க்ஸ். அதன் மூலம் சமுதாய வளர்ச்சியின் தன்மையையும், அதன் காரணங்களையும் கண்டறிந்தான். அவற்றைக் கொண்டு மனித சமுதாயம் எதிர் காலத்திலே எப்படியெப்படி முன்னேறப் போகின்றதென்பதை நிதானித்துள்ளான். அதற்கான திட்டங்களையும் வகுத்து உதவியுள்ளான். உலக மக்களின் எதிர்கால இன்ப வாழ்வின் தத்துவங்களை வகுத்துக் கொடுத்தானல்லவா? அவற்றை மார்க்சீயமென்று அவனது பெயராலேயே அழைக்கின்றனர். அவற்றைப் பொதுவுடைமையெனவும் புகலுவதுண்டு.

'மார்க்சீயம் ஏட்டுச்சுரைக்காய்' என்று பலர் எள்ளி நகையாடிய காலமுமொன்றிருந்தது. அந்தக் காலம் மலையேறிவிட்டது. இன்று கூட அரசியல் தத்துவங்களையறியாத நம் நாட்டவர் பலர் மார்க்சீயம் நம் நாட்டிற்குதவாததென வம்பு பேசுவர். அது தவறு. மார்க்சீயம் குறிப்பிட்ட ஒரு நாட்டின் நலன் கருதியோ, ஓரின மக்களின் நலன் கருதியோ வகுக்கப்பட்டதல்ல. ஒரு காலத்தைக் குறித்தும் தீட்டப்பட்டதல்ல. அகில வுலக மக்களின் இன்ப வாழ்வு கருதி வகுக்கப்பட்டதாகும். மார்க்சீயம் பொதுவுடைமையைப் புகுத்துவதுடன் நின்று விடுவதல்ல. மனிதன் புத்துணர்வு பெற்றுப் புதுவாழ்வு வாழவழி வகுத்துக்கொண்டே போகின்றது! மார்க்சீயம் மனித வாழ்வின் எல்லாத் துறைகளிலும்

புரட்சிகரமான மாற்றத்தை யேற்படுத்திப் புதுமை யைப் புகுத்துவது! இன்பம் நல்குவது. மார்க்சினது பெயருடன் பின்னிக் கிடக்கின்றது மனித சமுதாயத் தின் இன்ப வாழ்வு.

புரட்சி யென்ற சொல்லைக் கேட்டவுடனே நம்மில் பலர் நடுங்குகின்றனர். உலகிற்கு அழிவு காலம் வந்து விட்டதென ஓலமிடுகின்றனர். அவர்கள் நினைப்பதே போல் புரட்சி யென்பது அவ்வளவு பயங்கரமானதல்ல. பசியால் வாடும் குழந்தை கதறி யழுகின்றது. சாதா ரணமாகச் சொல்லும்போது குழந்தை பாலுக்காக அழு கின்றது என்று சொல்லுகின்றோம். இதை அரசியல் மொழியிலே சொன்னால் தனக்கு வேண்டிய பாலைப்பெறு வதற்காக அக்குழந்தை புரட்சி செய்கின்றது என்கின் றோம். ஆகவே புரட்சி யென்பது இயற்கைக்கு மாறு பட்ட செயலல்ல என்பதாகி விட்டது. அதுமட்டுமல்ல. அது இன்ப வாழ்விற்கு இன்றியமையாததுமாகிவிட் டது.

மக்களைச் செக்கு மாடுகள் போலடித்துப் பிழியும் புரோகிதக் கூம்பலிருக்கின்றதே, அது புரட்சியைக் கண்டு கலங்கவேண்டியதுதான். ஏன? மக்களை மடமை யிலாழ்த்தி வரும் மதக்கொள்கைகளுக்குச் சாவுமணி யடித்து விடுமலலவா? மக்களை யடக்கி ஆளப்பிறந்தவர் களென மமதை பேசும் மன்னர்கள் மருளவேண்டியது தான். ஏன்? மன்னர்கள் மனிதர்களாக்கப்பட்டு விடு வார்களென்பதற்காக. இன்றைய சமுதாயத்தின் தலை வர்களஞ்சவேண்டியது தான். ஏன்? அவர்களது ஆதிக்க வாழ்வழிந்து விடுமல்லவா? சீமான்கள் சீற் றங்கொள்ள வேண்டியதுதான். ஏன்? அவர்களின் செல்வக் குவியல்கள் மக்களின் பொதுச்சொத்தாக்கப்

பட்டு விடுமென்பதற்காக. ஆனால், மக்கள் மருளு வானேன்? வறுமையிலே பிறந்து வளர்ந்து, வாடி வதங்கி மடியும் மனித குலம் அஞ்சுவானேன்.

ஆகவே, மேலே சொன்ன சுயநலமிகள் சொல்வதே போல், புரட்சியானது மக்களுக்குக் கேட்டையோ, நாட்டிற்கு நாசத்தையோ விளைவிப்பதல்ல. புரட்சி யென்பது நாட்டை நவ நாகரீகப்படுத்துவதற்காகச் செய்யப் படும் முயற்சியாகும். மக்களது வாழ்விலே இன்பமும், எழிலும் ததும்புவதற்காகச் செய்யவேண்டிய செயலே யன்றி வேறில்லை.

மக்களது இன்ப வாழ்விற்கான தேவைகளைப் பெறுவதின் பொருட்டுச் செய்யப்படும் பணிதான் புரட்சி யென்பது. மக்களது தேவையை யுணர்ந்து, வாழ்க்கை முறையிலே, சமுதாய அமைப்பிலே ஒரு மாற்றத்தை அமைப்பது, புதுமையைப் புகுத்துவதுதான் புரட்சி. புரட்சியானது சமுதாய முற்போக்கின் தூண்டு கோல். மனித சமுதாயத்திற்கு ஒளி யூட்டும் சுடர் விளக்கு. அறியாமையை யழித்து அறிவைப் புகுத்துவது தான் புரட்சி. வறுமையை யொழித்து வாழ்வளிப்பது தான் புரட்சி.

புரட்சியென்ற சொல்லைக் கேட்டவுடனே மக்களின் மண்டைகளுடைபடுவது, மாடமாளிகைகள இடிபடுவது, மன்னர்களின் மண்டைகள பிளந் தெறியப்படுவது செல்வவான்களின் சொத்துக்கள சூறையாடபபடுவது, இவைதான் மக்களின் மனக்கண் முன காட்சியளிக்கின் றன. பலர் புரட்சியென்ற சொல்லுக்கே இதுதான் பொருளென்று கூட எண்ணி வருகின்றனர். பலர் பயப்படுவதேபோல் புரட்சியில் மக்களின் மண்டைகள் உடைபட வேண்டுமெனபதில்லை. ஆளும் வர்க்கத்தின் சிரங்கள் கொய்யப்பட்டு அரண்மனைகள் இடிபடவேண்டு

மென்பதில்லை. அத்தகைய பலாத்காரப் புரட்சிகள் நடைபெறும் காட்டுமிராண்டிக் காலத்தைக் கடந்து விட்டோம்! இக்காலப் புரட்சிகள் யாவும் மக்களின் மனதிலே நிகழும் மாற்றத்தின் மூலம் சந்தடியின்றி நடந்துவிடுகின்றன! சென்ற ஆண்டு ஆங்கில நாட்டிலே ஓர் மாபெரும் புரட்சி நடந்தது. இதுவரை உலகி லெழுந்த புரட்சிகளுக்கும் இதற்கும் மலைக்கும் மடுவிற்கு முள்ள மாறுபாடு! ஏகாதிபத்திய வெறி கொண்ட ஆங்கில முதலாளிகளின் முதுகெலும்பாகிய 'கன்சர் வேடிவ்' கட்சியைத் தேர்தலிலே தோற்கடித்து, தொழிற் கட்சியை ஆட்சி பீடத்திலமர்த்தினார்களே, அதைத் தான் சொல்லுகின்றேன். முதலாளிகளின் கட்சியைத் தேர்தலிலே தோற்கடித்ததின் மூலம் முதலாளித்துவ ஆட்சிக்கே சாவுமணியடித்து விட்டார்கள்! ஒரு சொட்டு இரத்தம் சிந்தாமல் முதலாளித்துவ அரக்கன் வீழ்த்தப் பட்டான்! உலகம் கண்டறியாத புதுமை இது! ஆங்கில நாட்டிலே இத்தகை புரட்சிதான் நடைபெறுமென்று அந்தக்காலத்திலேயே அறுதியிட்டுக் கூறியுள்ளான் மார்க்ஸ்!

புரட்சியையே ஓர் மாபெருங்கலையாக ஆக்கியவன் மார்க்ஸ். அதற்கு இலக்கணமும் வகுத்துவிட்டான். சமுதாயத்திலே புரட்சிக்கு வேண்டிய சாதனங்கள் யாவும் இருப்பதனாலேயே புரட்சி யேற்பட்டு விடாது. புரட்சிக்கு வேண்டிய சூழ் நிலையில்லாத போழ்து மக்களது உணர்ச்சியைத் தூண்டித் தட்டி யெழுப்பு வதனாலேயும் புரட்சியைத் தூண்டி விட்டுவிட முடி யாது. ஒரு புரட்சிக்காகப் பல்லாண்டுகள் மக்களின் மனம் பணபடுத்தப்பட வேண்டும். அதன்மூலம் அந்தச் சூழ் நிலையையும் அமைத்துக் கொண்டு வருதல் வேண்டும். அப்பொழுது தான் மக்களின் மனோநிலை

பண்படும். அதன் காரணமாக அந்த மாற்றத்தை மக்கள் விரும்பி வரவேற்பர். புரட்சி மிகவும் கவனத்துடனும் முன்னெச்சரிக்கையுடனும் நடத்தப்படுதல் வேண்டும். திடீரெனப் புரட்சி செய்து மக்களின் மனநிலை புதுமையைப் புகுத்திவிட முடியுமென்று நினைப்பது அறிவீனம். மக்களின் மனம் பண்படவில்லையேல், அவர்கள் எதிர்ப் புரட்சியிலிறங்கி விடுவர். அதனால் பேராபத்துக்கள் ஏற்பட்டுவிடும். இத்தகைய திடீர்ப் புரட்சிகள் பல படுதோல்வியடைந்துள்ளன. பொன் ஞன் தத்துவங்களைக்கூட மக்கள் ஏற்க மறுத்துக் கிளர்ச்சி செய்துள்ளனர்.

# 5

மார்க்ஸ் மனித சமுதாயத்தின் சென்றகால வரலாற்றை அலசி யாராய்ந்தான். அதன் காரணமாக மனிதனின் எதிர்கால வாழ்வை நிதானித்துள்ளா னென்று சொன்னோமல்லவா? மனித வர்க்கத்தின் சென்ற கால வரலாறு மார்க்ஸினது மனக்கண்முன் எவ்வாறு காட்சியளிக்கின்றதென்பதைப் பார்ப்போம். மனிதனும் விலங்கினத்தைச் சேர்ந்தவன்தான். ஒரு காலத்தில் விலங்குகள் போலவே காடுகளில் திரிந்து வாழ்ந்து வந்தான். ஆனால், மனிதனுக்கும், விலங்குகளுக்கும் சில மாறுபாடுகளிருக்கின்றன. விலங்குகள் பெரும்பாலும் தனித்து வாழ்கின்றன. மனிதன் மட்டும் தனித்து வாழ்வதில்லை. கூட்டமாகச் சேர்ந்தே வாழ விரும்புகின்றான். அவனது உடலமைப்பு மற்ற விலங்குகளைப்போல் பலம் வாய்ந்ததல்ல. ஆகையால், தனித்து நின்று வாழ்க்கைப் போராட்டத்தைச் சமாளிக்க அவனால் முடிவதில்லை. ஆகவேதான், பலருடன் சேர்ந்தே வாழ விரும்புகின்றான். வாழ்கின்றான். இப்படிப் பலர் சேர்ந்து வாழ்வதுதான் சமூகம் என்பது. இந்த சமூகம் காலந்தோறும் மாறிக்கொண்டே வந்திருக்கின்றது. மனிதனின் அறிவு விரிந்து பெருகப் பெருக சமூகமும் முன்னேறியே வந்திருக்கின்றது.

இப்படிக் கூட்டமாகச் சேர்ந்து வாழ்ந்து வந்த மக்கள் தங்களது வாழ்விற்குத் தேவையான பொருள்களைத் தாங்களே உற்பத்தி செய்து கொண்டனர். எல்லோரும் சேர்ந்து உழைத்தனர். அவ்வுழைப்பின்

பயனை யாவரும் பங்கிட்டு உண்டு வாழ்ந்தனர். இதைத் தான் 'அறுதி காலத்துப் பொதுவுடைமை' யென்று வரலாற்று ஆசிரியர்கள் கூறுவர். மக்கட் கூட்டம் பெருகப் பெருக அதிக பொருள்கள் தேவைப்பட்டன. பொருளுற்பத்தி சாதனங்களை மாற்றி அமைப்பதின் மூலம் அதிகப் பொருள்களை உற்பத்தி செய்து உபயோகித்தனர். இப்புதிய உற்பத்தி சாதனங்களைக் கண்டு அமைத்தார்களல்லவா, அவர்களே அவற்றின் சொந்தக்காரர்களுமாயினர். அவற்றின் மூலம் உற்பத்தி செய்யப்படும் பொருள்களும் அவர்களுக்கே சொந்தமாயின. இதுதான் சமுதாயத்திலே தனியுடைமை ஆரம்பமான காலமாகும்.

காலம் காற்றினும் கடிந்து சென்றது. மனிதனின் அறிவும் பெருகிக்கொண்டே வந்தது. அவனது தேவைகளும் அதிகரித்துக்கொண்டே வந்தன. இவை காரணமாகப் பொருளுற்பத்தி முறையிலே பெரும் பெரும் மாறுதல்கள் நிகழ்ந்துக்கொண்டேயிருந்தன. இடைக் காலத்திலே, மேலை நாடுகளிலே பொருளுற்பத்திக்கு யந்திர சாதனங்கள் கண்டு பிடிக்கப்பட்டன. பெரிய பெரிய தொழிற்சாலைகள் நிறுவப் பெற்றன. மேலைநாடுகளிலே அடிமை முறை நின்று நிலவிய காலமது. அக்காலப் பாட்டாளி மக்கள் யாவரும் நில முதலாளிகளின் அடிமைகளல்லவா? நிலமுதலாளித்துவம் சமுதாயத்தின் குரல் வளையைப் பல நூற்றாண்டுகள் இறுக்கிப் பிடித்து நசுக்கி வந்திருக்கின்றது! அந்த நாட்களிலே மக்கள் பட்ட அவதிகளுக்கும் அல்லல்களுக்கும் அளவேது! மனித சமுதாயமே நில முதலாளிகளின் அடிமையாக வாழ்ந்த காலமது! மனித வாழ்வு என்றாலே ஓயாத உழைப்பு, சலியாது உதை படுதல், என்றிருந்த காலம்!

அந்தக் காலத்திலே நில முதலாளிகள்தான் சமுதாயத்தின் கடவுள்கள். அதுவும் கருணையற்ற, ஈவிரக்கமற்ற கடவுள்கள்! நீரோவினும் வஞ்ச நெஞ்சங் கொண்ட நில முதலாளிகளின் ஆதிக்கம் வலுத்து நின்ற காலம். குனிந்த தலை நிமிர்ந்தால் குருதி பீறிட்டுக் கிளம்பச் சவுக்கடி கொடுக்கப்பட்ட காலம்! ஏனென்று கேட்போரை உயிருடனுடன் நெருப்பிலிட்டுப்பொசுக்கப்பட்ட காலம்! ஆண்டையின் மூச்சுக்கு மறுமூச்சென்றால் கொதிக்கும் எண்ணெயிலே தோய்த்து எடுத்தெறியப் படுவான் அடிமை. அந்தோ! கொடுமை!! கொடுமை!!! ஏனென்று கேட்பாரில்லை, ஏங்கித் தவிக்கும் மக்களைப் பார்த்து. நில முதலாளித்துவத்தினிடம் மனிதன் அனுபவித்து வந்த, இன்றும் அனுபவித்துவரும் துன்பங்களை நினைக்கின் நெஞ்சம் பதறுகின்றது. நினைவு தடுமாறுகின்றது. இக்கொடுமையின் பிடியிலே சிக்கித் தவித்த மக்கள் எப்படித் துணிந்து தொழிற்சாலைகளுக்கு வேலைக்குச் செல்ல முடியும்? நில முதலாளிகளும் அடிமைகள் மீதுள்ள தங்களது பிடியைத் தளர்த்தப் பிடிவாதமாக மறுத்து வந்தனர். இதன் காரணமாகத் தொழிற் சாலைக்கு வேண்டிய ஆட்கள் கிடைக்காமல், பொருளுற்பத்தியானது பெரிதும் பாதிக்கப்பட்டது. ஆகவே, சமுதாயத்தை நில முதலாளித்துவத்தின் ஆதிக்கத்திலிருந்து விடுவிக்க வேண்டிய பெரும் பொறுப்பைத் தொழில் முதலாளித்துவம் ஏற்றுக்கொள்ள வேண்டியதாயிற்று. "தொழிலாளிகள் அடிமைகளாக வாழவே படைக்கபபட்டவர்களென்று" மதங்கள் புகல்வது தவறு. உழைப்பாளிகளும் தங்களது முதலாளிகளைப் போலவே மனிதர்கள்தான். முதலாளிகளின் சொத்து அவர்களுடைய பணம். பாட்டாளி மக்களின் சொத்து, அவர்களது உழைப்பு.

முதலாளிகள் தங்கள் சொத்தை தங்களிஷ்டம் போல் செலவழிக்க உரிமையுண்டல்லவா? அதேபோல் பாட்டாளி மக்களுக்கும் தங்கள் சொத்தாகிய உழைப்பை யாருக்கு வேண்டுமானாலும் விற்பதற்கு உரிமையுண்டு. குறிப்பிட்ட ஒருவருக்குத்தான் வாழ்வு முழுவதும் குற்றேவல் செய்யவேண்டுமென்ற கட்டாயமேதுமில்லை” என்று தீவிரமாகப் பிரசாரம் செய்தனர். இதுகேட்ட பாட்டாளி மக்களில் பலர் தங்களது அடிமைத் தளைகளையுடைத் தெறிந்து வெளிக்கிளம்பினர். நில முதலாளித்துவம் தனது ஆதிக்கம் அழிவது கண்டு சினந்தெழுந்தது. தனது ஆதிக்கத்தின் அழிவுக்குக் காரணமான தொழில் முதலாளித்துவத்துடன் போராடியது. இத்தகைய போர்கள் பல நீண்டகாலம் நடந்தன மேனாடுகளிலே. நில முதலாளித்துவத்துடன் போராடிப் போராடித்தான் தொழில் முதலாளித்துவம் முன்னேறி வந்தது.

மேனாட்டு முதலாளித்துவம் ஓர்பெரும்பணியையேற்றுக் கொண்டது. மக்களுக்குப் பகுத்தறிவை ஊட்டியது. பழமையின் பிடியிலிருந்து விடுதலை பெறுவதற்கான ஊக்கமும், உரமும் ஊட்டியது. அதன் காரணமாக மனித சமுதாயம் நில முதலாளித்துவத்தின் பிடியிலிருந்து விடுதலை பெற்றது. அதன் காரணமாக அந்நாடுகள் முன்னேறிக்கொண்டே போகின்றன. நம் நாட்டு முதலாளித்துவமோ, அப்புனிதப் பணி புரியமறுக்கின்றது. பிடிவாதமாக மறுக்கின்றது. ஏன்? மேலைநாடுகளில் நில முதலாளிகளாக இருந்தவர்கள் யாவரும் பிரபுக்கள் குடும்பத்தைச் சார்ந்தவர்கள். தொழில் முதலாளிகள் யாவரும் நடுத்தர வகுப்பிலிருந்து வந்தவர்கள். ஆகவே, நில முதலாளிகளின் வீழ்ச்சியைப் பற்றித் தொழில் முதலாளிகள் கவலைப்படவேண்டிய நிலையி

விருக்கவில்லை. அது மட்டுமல்ல. சமுதாயத்தின்மீது நில முதலாளிகள் கொண்டிருந்த ஆதிக்கம் அழிய அழியத்தான் முதலாளித்துவ வளர்ச்சிக்கு சாதகங்கள் பெருகிவந்தன. ஆகவே, அவர்கள் நில முதலாளித்துவத்தை வீழ்த்துவதிலேயே கண்ணுக இருந்தனர். நம் நாட்டிலோ நிலைமை முற்றிலும் மாறுபட்டிருக்கின்றது. இங்குள்ள நில முதலாளிகளே பெரும்பாலும் தொழில் முதலாளிகளாகவுமிருக்கின்றனர். அதாவது பெரிய பெரிய நிலச் சுவான்தார்களே மில் முதலாளிகளாகவு மிருக்கின்றனர். ஆகவே, இங்கு நில முதலாளிகளின் வீழ்ச்சியே தொழில் முதலாளிகளின் வீழ்ச்சியுமாகின்ற தல்லவா? அதனுல் மக்கள் அறிவு பெற்றுவிட்டால் தங்களது ஆதிக்க மழிந்துவிடுமேயென அஞ்சுகின்றனர். தவிர, நில முதலாளித்துவ முறையழிந்து தொழில் முதலாளித்துவம் வளர்ந்துவிட்டால், அதுவுமழிந்து பொதுவுடைமை வந்துவிடுமென அஞ்சுகின்றனர். அதனுல்தான், மக்களை அறியாமையிலேயே ஆழ்த்தி வைத்திருப்பதென முடிவு கட்டிவிட்டனர். அறியாமையிலுழலும் மக்கள்தானே, அடிமைகளாகவே விரும்பி வாழ்ந்து வருவர்.

அறிவு வளர்ச்சியின் காரணமாக நீராவியின் சக்தி கண்டு பிடிக்கப்பட்டது. பொருளுற்பத்தி முறைக்கு அதன் சக்தி பயன் படுத்தப்பட்டது. உற்பத்தி சக்தி பெருகியது. பொருள்கள் குவிந்தன. செல்வம் பெருகியது. பதினெட்டாம் நூற்றுண்டின் இறுதியிலே முதலாளித்துவத்திற்குப் பெரும் தடையாக இருந்துவந்த நில முதலாளித்துவம் வீழ்த்தப்பட்டது. முதலாளித்துவம் வெற்றிச் சிங்காதனத்துடன் புது யுகத்தின் தலைவாயிலிலே புகுந்தது. அதிக பொருள்களை உற்பத்தி செய்வோரிடம் அதிக செல்வம் குவிந்தது. சமுதாயம்

முதலாளி தொழிலாளியெனப் பிளவுபட்டது. உழைத்துப் பொருள்களை உற்பத்தி செய்வோர் தொழிலாளிகள். அவர்களது உழைப்பின் பயனை அடைவோர் முதலாளிகள். பின்பு, பொருளுற்பத்திக்கு மின்சார சக்தி பயன்படுத்தப்பட்டது. அதன் காரணமாக, முதலாளித்துவ உற்பத்தி முறையானது தலைதெறிக்கும் வேகத்தில் முன்னேறியது. முதலாளிகளிடையே மலைமலையாகச் செல்வங்குவிந்தது. அது போதாதென்று அதிகாரமும் அவர்களைத்தேடி வந்தடைந்தது. பொருளுற்பத்தி முறையில் ஏற்பட்ட இந்த மாறுதல் சமுதாயத்தை எப்படிப் பாதித்தது பார்த்தீர்களா? சமுதாயம் தலைகீழாகப் புரண்டது. முன்பு நிலம் பொருளுற்பத்தி சாதனமாக இருந்தது. நில முதலாளிகள் சமுதாயத்தின் தலைவர்களாக இருந்தனர். இப்பொழுது யந்திரம் பொருளுற்பத்தி சாதனமாக மாறியது. யந்திர முதலாளிகள் சமுதாயத்தின் தலைவர்களாகி விட்டனர். யந்திரத் தொழிலுடன் போட்டியிட வன்மையற்ற குடிசைத் தொழில்கள் அழிந்துபட்டன. அவற்றிற்கு முதலாளிகளாக இருந்தவர்கள் பிழைப்பிற்காக யந்திர முதலாளிகளிடம் கூலிக்கு அமரவேண்டியதாயிற்று. முன்பு முதலாளியாக இருந்தவன் இப்பொழுது தொழிலாளியானதைக் கண்டீர்களா? அரசன் ஆண்டியானது போலாயிற்று அவர்களது நிலை! பொருளுற்பத்தி முறையிலேற்பட்ட மாற்றம் மனிதனது நிலையை எவ்வளவு தூரம் பாதித்துள்ளது என்று பாருங்கள்!

ஒரு சமுதாயத்தில் ஆதிக்கம் வகிப்போரைப் பொறுத்துத்தானே அந்தச் சமுதாயத்தின் நாகரீகம் அமையும். நில முதலாளித்துவ சமுதாய அமைப்பு அழிந்து தொழில் முதலாளித்துவ சமுதாய அமைப்பு ஏற்பட்டதல்லவா? அதற்குத்தகுந்தாற்போல்

பொருளாதார அமைப்பு, வாழ்க்கைமுறை வாழ்க்கையின் நோக்கம், கலைகளைப் பற்றிய கருத்துக்கள் எல்லாம் மாற்றியமைக்கப்பட்டன. மக்களது மனப்பான்மை பழக்கவழக்கங்கள், வாழ்க்கை முறையாகியனவெல்லாம் இந்த மாறுதலின் சுழலிலேசிக்கிப் புதுப்பிக்கப்பட்டன. மக்களின் மனமாற்றத்திற்கொப்ப பழைய வாழ்க்கை முறையைப் புறக்கணித்துவிட்டுப் புதிய வாழ்க்கை முறையை மேற்கொண்டனர்.

இப்புதிய சமுதாயத்தின் தலைவர்கள் தொழில் முதலாளிகள். அவர்கள்தான் சமுதாயத்தின் காப்பாளர்கள். அதாவது ஆளுவோராக ஆதிக்கம் பெற்றவர்கள். மலையொத்த செல்வம் போதாதென்று அதிகாரமும் அவர்களது கைக்கு வந்துவிட்டதென்றால் சொல்லவா வேண்டும்? சுரண்டல் ஒன்றையே தங்கள் வாழ்வின் நோக்கமாகக்கொண்டனர். சுரண்டல் வழியில் ஈடுபடுவோர்க்கு ஈவிரக்கமேது? மனிதத்தன்மைதானேது? எங்கும் வறுமையும், துன்பமும், துயரமும் மலிந்தன. பாட்டாளி மக்கள் தங்களது உழைப்பின் பயனைப் பிறர் உறிஞ்சி வாழ்வதையுணருகின்றனர். "ஒருநாளைக்குப் பலமணி நேரம் மாடுபோலுழைத்துப் பொருள்களை உற்பத்தி செய்கின்றோம். செல்வத்தைக் குவிக்கின்றோம். இருந்தும் எங்களது வாழ்விற்கு இன்றியமையாதன கூட எங்களுக்குக் கிடைப்பதில்லை. நாங்கள் உற்பத்தி செய்து குவிக்கும் செல்வத்தைக் கொள்ளைகொண்டு போவதற்கு ஏதோ ஓர்திட்டமிருக்கின்றது. அந்தக் கொடியதிட்டத்திலிருந்து நாம் விடுதலைபெறவேண்டும். அந்த திட்டத்தை அடியோடு அழித்தால்தான், அதிலிருந்து விடுதலைபெற்றால்தான் நமக்கு வாழ்வுண்டு" என்பதை உணருகின்றனர். இந்தச் சுரண்டல் சூழ்ச்சியிலிருந்து விடுபட முயலுகின்றனர்.

அதற்கான திட்டந் தீட்டுகின்றனர். இது கண்டு முதலாளிகள் நடுங்குகின்றனர். தங்களது உரிமையாகிய சுரண்டுதலை நிலைநிறுத்த முயலுகின்றனர். அதன் காரணமாக இருசக்திகளும் முட்டிமோதுகின்றன. இவ்விரு பிரிவினரின் சண்டைகளைப் பற்றிப் பேசுவதுதான் மனிதசமுதாயத்தின் சரித்திரமென்பது. பாட்டாளி மக்கள் தங்களது வாழ்வை மேம்பாட்டையச் செய்வதற்காகப் போராடுவர். அதற்காக சுரண்டலை அடிப்படையாகக் கொண்ட சமுதாய அமைப்பை மாற்றியமைக்க முயலுவர். பாட்டாளி மக்களின் வாழ்வு பணக்காரர்களின் தாழ்வல்லவா? அதனால், அவர்கள் இதை யெதிர்ப்பர். "இன்றைய சமுதாய அமைப்பானது இறைவனாலேயே நிறுவப்பட்டது. பல்லூழி காலமாக நின்று நிலவுவது. அதைமாற்ற முயல்வது கொடிது. நமது மதத்திற்கே விரோதமானதாகும்" என்று வம்பு பேசுவர். மற்றும் நாட்டிலே நிலவும் செய்தித்தாள்களின் நிலையங்கள் யாவும் முதலாளிகளாலேயே நடத்தப்பெறுவதால் அவை பாட்டாளிகளின் செயல்களைக் கடுமையாகத்தாக்கும். இன்றைய சமுதாய அமைப்பை மாற்றியமைக்க முயலுவோரை "நாத்திகர்கள், மானிட இனத்தின் பரமவிரோதிகள் பஞ்சமா பாதகர்களென்றேசும்". முதலாளிகளின் நலனுக்காகவே நிறுவப்பட்டு, நின்றுநிலவும் அரசாங்கமும் தொழிலாளர் மீதுபாயும். எங்கும குழப்பம, கலகம், கலவரம்.

இதைத்தான் வகுப்புப் போராட்டம் என்கின்றான் மார்க்ஸ். சமுதாயத்திலே ஏழையென்றும், பணக்காரனென்றும், தொழிலாளியென்றும், முதலாளியென்றும், உயர்ந்தவனென்றும், தாழ்ந்தவனென்றும், வகுப்புப்பிரிவினை நின்று நிலவும்வரை இத்தகைய வீணை போராட்டங்கள் நடந்து கொண்டே தானிருக்கும்.

இந்த வகுப்புப் போர் ஒழியவேண்டுமானால் என்ன செய்யவேண்டும்? அதற்கு மூலகாரணமாக விருக்கும் வகுப்புப் பிரிவினையை ஒழிக்கவேண்டும். இந்தமாதிரி பிரிவினையற்ற சமுதாயம் எல்லா நாடுகளிலும் அமைக்கப்பட்டுவிட்டால, உலகில் எந்தவிதமான போர்களும், பூசல்களும் நிலவமுடியாது. அப்பொழுது புதுமைக்கும், பழமைக்கும்கூட்ட போரிராது! பழமை புதுமையை விரும்பி வரவேற்று வாழ்வளிக்கும்! அது மட்டுமல்ல; பழமை புதுமையிடம் புன்முறுவலுடன் விடைபெற்றுச் செல்லும்! எங்கும் இன்பம் பொழியும் எழில் ததும்பும். புதுமை அரும்பி மலர்ந்து மணங்கமழ்ந்து கொண்டேயிருக்கும்!

இந்தக் கோணத்திலிருந்து மனித சமுதாய வரலாற்றை ஆராய்ந்ததின் காரணமாக, மனிதகுலம் எவ்வாறு இன்றைய நிலையை அடைந்ததென்பதைத் தெளிவாக உணரமுடிந்தது. மனித சமுதாயம் ஒவ்வொரு நிலையிலும் போராடிப் போராடித்தான் முன்னேறி வந்திருக்கின்றது. போரிலே வென்று பழய கட்டுப்பாடுகளைத் தகர்த்தெறிந்து புதியனவற்றை ஏற்றுக்கொண்டே முன்னேறி வந்திருக்கின்றது. ஒரு போராட்டம். அப்போரிலேகண்ட வெற்றியின் காரணமாகச் சிறிது வளர்ச்சி. மறுபடியும் போராட்டம். பின்னும் சிறிது வளர்ச்சி. இப்படியாக, தானின்ற நிலையிலிருந்து, பின் தானடையவிருக்கும் நிலைமைக்காகப் போராடிப் போராடித்தான் சமுதாயம் வளர்ந்து வந்திருக்கின்றதேயல்லாது வேறெந்த சக்தியாலுமல்ல. பலர் நினைத்துக் கொண்டிருப்பதேபோல் அறிவுக்கெட்டாத சக்தி ஒன்றிருந்து கொண்டு அது உலகை நாகரீகப்படுத்திக் கொண்டு செல்லவில்லை. மக்கள் வாழ்வதும், முன்னேறுவதும் அவர்களது உழைப்பின்

காரணமாகத்தான். வாழ்வின் தேவைகளுக்கு வேண்டியவற்றை உழைத்து உற்பத்தி செய்து கொள்ளுகின்றனர். தங்களது வாழ்வின் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளுவதற்காக ஓயாது போராடுகின்றனர். தேவைக்குத் தக்கவாறு அறிவைவிரிவுபடுத்தி, ஆற்றலைப்பெருக்கி முன்னேறுகின்றார்கள். ஆகவே, மனித வாழ்வே ஓர் போராட்டமாக அமைந்துவிட்டது. இந்த இடையற்ற போராட்டங்களுக்கிடையில் தான் மனிதன் மனம் வளருகின்றது. நாகரிகம் பிறக்கின்றது. புதிய சமுதாயம் உருவாகின்றது!

மனித சமுதாயத்தை இப்போர்களின் கோரப்பற்களிலிருந்து மீட்கவேண்டும். கொடுமையின் பிடியிலிருந்து விடுவிக்கவேண்டும். போருக்கான சூழ்நிலைகளைப் பொசுக்கி எறியவேண்டும். போருக்கு ஊக்கமூட்டி ஆக்கமளித்துவரும் தனிச்சொத்துரிமையை அழித்து ஒழிக்க வேண்டும். ஆகவே, இன்றைய சமுதாயஅமைப்பை அடியோடு பெயர்த்தெறியவேண்டும். புதிய சமுதாயத்தை அமைக்கவேண்டும். இப்புதிய சமுதாயத்திலே ஏழை, பணக்காரன், ஆண்டான், அடிமை, உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்பன்போன்ற வகுப்புப் பிரிவினையே இருக்காது. தனிமனிதன் சேமிப்புக்கு இடமிராது அதன் அடிப்படையிலெழுந்த வறுமையும், துன்பமும் மறைந்து போகும். தனியுடைமையால் போற்றி வளர்க்கப்பட்டு வந்த போட்டியும், பூசல்களும், பேராசையும், வஞ்சகமும் இல்லாதொழியும். பொருளுற்பத்தி சாதனங்கள் யாவும் சமுதாயத்தின் பொதுச்சொத்தாக்கப்படும். பொருள்களுற்பத்தி முறையும் மாற்றியமைக்கப்படும். ஒரு சிலரது லாபத்திற்காக பொருள்களை உற்பத்தி செய்வதென்பதிராது. மக்களின் தேவைகளுக்காகப் பொருள்களுற்பத்தி செய்யப்படும். இப்புதிய சமுதாயத்திலே மக்களின் சக்திகள் மனித சமுதாய நலனுக்கே

உபயோகிக்கப்படும். அத்தகைய சமுதாயத்திலே மக்கள் தங்களது உழைப்பின்மூலம் தங்களுக்காகவும், சமுதாய நலனுக்காகவும் வாழ்வர். மனிதசமுதாய நலன் கருதி வாழ்வதும், உழைப்பதும் ஒவ்வொருவருடைய கடமையாகிவிடுகின்றது. பொருளாதார நிலையை அடிப்படையாகக்கொண்ட ஏற்றத்தாழ்வில்லாத சமுதாயம் அமைக்கப்படும். இப்புதிய சமுதாயத்திலே ஒவ்வொருவரும் தங்களது திறமைக்குத்தக்கவாறு உழைத்தாக வேண்டும். தேவைக்குத் தக்கபடி வாழ்க்கைவசதிகள் அளிக்கப்படும். இத்தகைய சமுதாயத்திலேதான மனிதன் மனிதத்தன்மையுடன் வாழமுடியும். இப்புதிய சமுதாயத்தைதயமைக்கும் பொருட்டுத்தான மார்க்ஸ் கடுமையாக உழைத்தான. அவனது உழைப்பு வீண்போகவில்லை. அவனது அன்றைய கனவு இன்று நினைவாகிவிட்டது. எண்ணவுலகை ஆட்கொண்டிருந்த அவனது கருத்துக்கள், இன்று நடைமுறையிலும் நின்று நிலவுகின்றது.

முதலாளித்துவ சமுதாய அமைப்பைக்கொண்ட நாடுகளின் இன்றைய தலைவர்கள் மார்க்சீயத்தைக் கரைத்துக்குடித்திருக்கின்றனர்கள். மார்க்சீயத்தைப்பற்றி ஒரு தொழிலாளர் தலைவனுக்குத் தெரிந்ததைவிட, முதலாளிகளுக்கு அதிகம் தெரியும்! பாட்டாளி மக்களுக்கு வேண்டிய வாழ்க்கை வசதிகளைச் செய்துகொடுப்பதின் மூலம் முதலாளித்துவத்தின் அழிவை ஒத்திப்போட்டுக் கொண்டே வருகின்றனர்கள். அதற்காக அருமையான திட்டங்கள் தீட்டி மிகவும் கவனமாக வேலைசெய்துவருகின்றனர். இன்றைய அமெரிக்க முதலாளிகளைப்பாருங்கள் உலகமுழுவதையும் சுரண்டிச் செல்வத்தைக்குவிக்கின்றனர். ஆனால், அவ்வளவையும் தாங்களே மூட்டைகட்டி வைத்துக்கொள்வதில்லை. அந்தச் செல்வக்குவியலைப்

பெருவதற்குக் காரணமாகவிருக்கும் அந்நாட்டுத் தொழிலாளர்களுக்கும் ஓர் பகுதியைக்கொடுத்து அவர்களது வாழ்வின் தேவைகளையும் ஓரளவுக்குப் பூர்த்தி செய்கின்றனர். அதன்மூலம் தொழிலாளிகளின் கோபத்திற்காளாகாது தப்பித்துக்கொள்ளுகின்றனர். சமூக அந்தஸ்திலே முதலாளிக்கும், தொழிலாளிகளுக்கும் அதிக ஏற்றத்தாழ்வு காட்டாதவகையில் சமுதாய அமைப்பைத் திருத்தியமைத்துக்கொள்ளுகின்றனர். அதனால் அந்த நாட்டுத்தொழிலாளிகள், முதலாளிகளை எதிர்த்துக்கிளர்ச்சி செய்யவேண்டிய அவசியமில்லாமலிருக்கின்றனர்! ஆனால், இந்தநிலை எப்பொழுதுமே நீடித்து நிற்கமுடியாதென்பதை அந்நாட்டு முதலாளிகளுணராமலில்லை. நடந்தவரை நடக்கட்டும் என்பதுதான் அவர்களது கருத்து.

# 6

உலக முன்னேற்றம் கருதியும், மனிதசமுதாய நல்வாழ்வு கருதியும் எத்தனையோ அறிஞர்கள் எத்தனையோ விதமான திட்டங்களை தீட்டிக்கொடுக்கலாம். அவைகளைத் தழுவி வாழும் மக்கள் நவநாகரீகமாக வாழ்வதுபோல்தோன்றலாம். மக்களது வாழ்விலே இன்பமும், எழிலும் ததும்புவதுபோலவும் தோன்றலாம். ஆனால் அவை மார்க்சியத்தைத் தழுவியமைக்கப்படாதவரை நிச்சயம் வெற்றிபெறவேமுடியாது. "மார்க்சியம் மக்களின் நல்வாழ்விற்கு உகந்ததல்ல; அதனினும் சிறந்த அமிழ்தம் மக்களுக்கு வழங்கிவிட்டேன்" என்று வீரம்பேசிய ஹிட்லரின் கதியைக்கண்டீர்களா? அவனது தத்துவங்களையேற்று வாழ்ந்ததின்மூலம் நாகரீகத்தின் எல்லைக்கோட்டைத் தொட்டுவிட்டதாக மனப்பால் குடித்துவந்த ஜெர்மன்நாட்டு மக்களின் இன்றைய பரிதாபகரமான நிலைமையைப்பாருங்கள்! மார்க்சியத்தை அடித்துவீழ்த்தமுயன்ற அரக்கன்வீழ்ந்தான். மார்க்சியமோ மாண்புடன்நின்று நிலவுகின்றது!

பிற்போக்கின் இரும்புக்கரங்களின் பிடியிலே சிக்கித் தவிக்கும் நமக்கு மார்க்சியந்தான் விடுதலைப்பாதையைச் செப்பனிட்டுக்கொடுக்கின்றது. மனிதவர்க்க முன்னேற்றத்திற்கு மார்க்சியம்தான் சிறந்த மாற்றுமருந்தென்று அகிலவுலகமும் தீர்ப்புக்கூறிவிட்டது. ஆனால், நம் நாட்டுத்தலைவர்களிலே பெரும்பாலோர் மார்க்சியம் என்று ஒன்றிருப்பதாகவே தெரியாததுபோல் நடித்து வருகின்றனர்! தெரிந்ததாகச் சொல்லிக்கொள்ளும்

ஓரிருவர் மார்க்சீயம் நம் நாட்டின் பண்பாட்டிற்குதவாத தெனத் தட்டிக்கழிக்க முயலுகின்றனர். இதன்காரணமாக நாட்டில் நடப்பதென்ன? மார்க்சீயத்தைப்பற்றிக் கேலிபேசப்படுகின்றது! இழிவுரை கூறப்படுகின்றது! சிலர் மார்க்சீயததின்மீது போரும் தொடுத்துவிட்டனர்! ஏகாதிபத்தியங்களின் ஓயாத உறுமல்களுக்கும், முதலாளித்துவத்தின் இடைவிடாத தாக்குதல்களுக்கும், தப்பித்தலைநிமிர்ந்து நிற்கும மார்ச்சீயமா இவர்களைக் கண்டஞ்சப்போகின்றது?

இவர்களின் இக்கூற்றுக்குக் காரணமென்ன? இன்று, நம்நாட்டில் நிலவும் பெரும்பாலான அரசியல் கட்சிகள் பணக்காரர்களால் தங்களது சுயநலங்கருதி நிறுவப்பட்டவை. பணக்காரர்கள் தாங்களாகவே எதையும் சாதித்துக்கொள்ளமுடியாதல்லவா? ஆகவே அவர்கள் பாட்டாளி மக்களையும தங்களது கட்சிகளில் சேர்த்துக்கொள்ளுகின்றனர். பாட்டாளி மக்களின் நலன் கருதியே தாங்களும் தங்களது அரசியல் கட்சிகளும் பாடுபடுவதாகப் பாசாங்கு செய்கின்றனர். பாட்டாளி மக்களைத் தட்டிக்கொடுத்து மயக்கி ஏமாற்றித் தங்களுக்குச் சாதகமாக உபயோகித்துக்கொள்ளுகின்றனர். அரசியல் அறிவைப்பெறாத பாமர மக்கள் தங்களது தீராத பகைவர்களையே தங்களது தலைவர்களாகத் கொள்ளுகின்றனர்! முதலாளிகள், பாட்டாளி மக்களிடையே ஒற்றுமை நிலவாமல் பார்த்துக்கொள்வதிலே கண்ணுங்கருத்துமாகவிருப்பர். அவர்களிடையே ஒற்றுமை நிலவினால் முதலாளித்துவத்திற்குச் சாவுமணியடித்துவிடுவார்களல்லவா? அதற்காகப் பாட்டாளி மக்களுக்குள்ளேயே பிளவையேற்படுத்தப் பலவழிகளிலும் மறைமுகமாக உதவுவர். முதலாளிகளின் இத்தகைய சூழ்ச்சிகளை உணரமுடியாத மக்கள் தங்களுக்

குள்ளேயே வெறுப்பும் குரோதமும் கொண்டு ஒருவர்க் கொருவர் உதைத்துக் கொண்டு மடிகின்றனர். பாட் டாளி மக்களின் சவக்குழி மீது பணக்காரர்களின் ஆடம்பரமாளிகைகள் வானளாவி நிற்கின்றன. அவர் களது இரத்தவெள்ளத்திலே பணக்காரர்களின் இன்பத் தோணிகள் மிதந்து செல்கின்றன. பாட்டாளி மக்களின் நல்லகுணமும், சுலபமாக எவரையும் நம்பிவிடும் தன்மை யும், பணக்காரர்களால் இவ்விதமாக அயோக்கியத்தன மாகக் கையாளப்படுகின்றன!

இந்த நாட்டிலுள்ள செய்தித்தாள்கள் பெரும்பா லும் இந்த நாட்டு அரசியல் கட்சியில் ஆதிக்கம் வகிக் கும் முதலாளிகளாலேயே நடத்தப்படுகின்றன. முதலா ளித்துவத்தை யெதிர்த்துப் போராட முயலுவோர் முத லாளிகளின் பிரசார பீரங்கிகளான பத்திரிகைகளால் கடுமையாகத் தாக்கப்படுகின்றனர். அரசியல் அறிவைப் பெறாத மக்கள் பத்திரிக்கைச் செய்திகளை நம்பி ஏமாறு கின்றனர். தங்களது நலன்களுக்காகப் போராடுவோ ரைத் தங்களது தீராத பகைவர்களான முதலாளிகளு டன் சேர்ந்துகொண்டு தாக்குகின்றனர்! பாட்டாளி மக்களது துயரங்களைத் துடைக்கத் தன் வாழ்வையே தியாகம செய்த மார்க்சையே, பாட்டாளி மக்களைக் கொண்டே எதிர்க்கச் செய்தவர்களல்லவா முதலாளி கள்! இன்று நம் நாட்டிலும் அதே நிலைமைதான் நிலவு கின்றது. பாட்டாளிமக்கள் தங்களது உண்மைத் தலை வர்களையுணர்ந்து அவர்களைப் பின்பற்றாதவரை அவர் களுக்கு விடுதலையேது? வாழ்வேது?

சென்ற அறுபதாண்டுகளாக அரசாங்கத்திற்கெதி ராக "வேலைநிறுத்தஞ்செய், சட்டமறுப்பு செய், கிளர்ச்சி செய், புரட்சிசெய்" எனபோதித்து மக்களுக்கு ஊக்க மூட்டிவந்த நமது தலைவர்கள் தங்கள் ஆட்சிபீடத்தி

லமர்ந்ததும் நமது நியாயமான கிளர்ச்சிகளைக்கூட வெறுக்கின்றனர்! வேதாந்தம் பேசுகின்றனர்! உண்ண உணவின்றி வாடுகின்றோம். உடுக்க உடையின்றி சோழி கின்றோம். குடியிருக்கக் குடிசையின்றி அவதிப்படுகின் றோம். "எங்களது துயரங்களைப்போக்க ஏதேனும் மார்க்க மில்லையா' என்று கெஞ்சுகின்றோம். அதற்கு நம் தலை வர்கள் என்ன பதில் கூறுகின்றனர் தெரியுமா? "நம் நாடு ஏழ்மையான நாடு, வறுமை மலிந்தநாடு. ஆகவே உங்களது கொடுமைகளைச் சகித்துக்கொண்டுதான் வாழவேண்டும" என்று அறிவுரை பகருகின்றனர். அவர்கள் அப்படிச் சொல்வது உண்மைதானு எனப தைச் சற்றுச்சிந்தித்துப்பாருங்கள். நம்நாடு செல்வங் கொழிக்கும் நாடு. நீர்வளம், நிலவளம், குடிவளம் இவை யாவும் கொண்ட பொன்விளையும் பூமிதான். குபேர சம் பத்திலே புரள்வதாகச் சொல்லப்படும் அமெரிக்காவுக்கு இந்தநாடு எந்தவிதத்திலே குறைந்ததென நினைக்கின் றீர்கள்? இருந்துமென்ன? மக்களது வாழ்வு பாலைவன மாகவனறோ இருக்கின்றது! மக்களின் துயர்துடைக்க எண்ணற்ற கடவுளகளிருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆனல், ஏழையின் குமுறல்கேட்டு இரக்கப்படும் கடவுள ஒன்றைக்கூடக்காணேம். நம்நாட்டின் செல்வம அனைத் தும் ஒருசில செல்வச்சீமான்களுக்குச் சொந்தமாகவிருப் பதால், பலகோடி மக்கள் ஓட்டாண்டிகளாய் வாழ நேரிட்டுவிட்டது. உலகிலே சிறந்த பல செல்வச்சீமான கள் இங்குதான் வாழ்கின்றனர்! கோடானகோடி மக்கள குடிக்கக்கூழின்றி வாழுமிந்த நாட்டிலே ஒருசிலர் 'சுவர்க்க'போகத்திலே மிதந்துவருகின்றனா. இந்தத் தரித்திரம் பிடுங்கித்தின்பதாகச் சொல்லபபடும் நாட் டிலேதான் உலகின் தலைசிறந்த தனவான் வாழ்கின்றார்! அவர்தான் நைஜாம் மன்னர்! மற்றும் நம்நாட்டிலே இன்று நிலவும் சமஸ்தான மன்னர்களிருக்கின்றார்களே,

அவர்களென்ன சாமானிய மானவர்களா? அவர்களது ஒருநாளைய ஊதாரிச்செலவுகளைக் குவித்தாலே மலையத் தனை செல்வமாகுமே! மற்றும் குறுநில மன்னர்களிருக் கின்றார்கள் குபேரசம்பத்திலே புரண்டுகொண்டு! நாற் பதுகோடி மக்களின் உதிரத்தையுறிஞ்சிக்கொழுத்துப் பருத்துக்கிடக்கும் டாட்டாக்களும், பிர்லாக்களும், டால்மி யாக்களும், பனியாக்களும், பார்சிகளும், ராஜாசர்களும் சாமானியமானவர்களென எண்ணுகின்றீர்களா? இவர் கள் யாவரும் பணக்கடலிலேமிதக்கும் திமிங்கிலங்கள். மற்றும் நம்நாட்டு வெங்கடாசலபதிகளும, சீரங்கநாதர் களும், பழனியாண்டவர்களும், மீனாட்சியம்மையார் களும், இருக்கின்றார்களே, அவர்களிலும் பல கோடீஸ் வரர்களுண்டு! இவர்களன்றி இன்னுமெத்தனையெத்த னையோ மதயானைகளிருக்கின்றனர! 'ஏழமையும் வறுமை யும் மலிந்தநாடு' என்று நம் தலைவர்களால் இடை விடாது பேசப்படும்நாட்டிலே இக்குபேரர்களெப்படித் தோன்றினர்? வேறு எந்தநாட்டிலிருந்து வந்தன இவர் களது பணமலைகள்? இப்பொழுதேனும உணருங்கள் நம்நாடு செல்வங்கொழிக்கும் நாடென்பதை.

நம்நாட்டின் சமுதாய அமைப்பிருக்கின்றதே அதன் கருணை'க்குப்பாத்திரமானதின் காரணமாக நாற்பது. கோடிமக்கள் கெட்டழிகின்றோம். ஒருசில செல்வச் சீமான்கள் சுகபோகங்களிலுழன்றுவருகின்றனர். இந்த அநியாயத்தை, கொடுமையை, காட்டுமிராண்டித் தனத்தை இன்றைய சட்டதிட்டங்கள் புனிதமானவை யென நியாயங்கூறுகின்றன! இவ்வட்டூழியங்களைத் தகர்த்துத் தரைமட்டமாக்குவதைவிட்டு அதைப் போற்றி வளர்க்கத் திட்டந்தீட்டுகின்றனர் நமது தலை வர்கள். வேலியே பயிரைமேய்வதுபோலாயிற்று இவர் கள் கூற்று.

நமது தலைவர்கள் இதுவரை வெள்ளையனை வெளியே விரட்டிவிட்டால் நமது நாட்டைப்பிடித்த பீடைகள் யாவும் ஒழிந்துவிடுமென்று சொன்னார்களல்லவா? இன்று வெள்ளையன் வெளியேறிவிட்டான். வெள்ளையன் வெளியேறியதாலேயே பிறவியில் உயர்தாழ்வு மறைந்துவிடவில்லை. சமயப்பூசல்கள் மடிந்துவிடவில்லை. ஏழ்மையும் அடிமைத்தனமும் அழிந்துவிடாது. மடமை மாய்ந்துவிடாது. செல்வங் குவிந்துவிடாது. ஆளுவோர் மாறினால்மட்டும் போதாது ஆட்சிமுறைமாறவேண்டும். இன்றைய அமைப்பை மாற்றியமைத்தல்வேண்டும். பொருளாதார அமைப்பைப் புதுப்பித்தல்வேண்டும். பலகோடிமக்கள் உழைத்து உற்பத்திசெய்யும் செல்வம் சிலரிடம்சென்று குவியும் இந்த அநியாயம் மாறவேண்டும். நமதுநாட்டின் விளைநிலங்கள், சுரங்கங்கள் தொழிற்சாலைகள், போக்குவரத்து சாதனங்கள் ஆகியனவெல்லாம் மக்களின் பொதுச்சொத்தாக்கப்படவேண்டும. அப்பொழுதுதான் நமக்கு வாழ்வுண்டு இந்த நாட்டிலே. வெள்ளையனுடைய மூட்டைமுடிச்சுக்களிலே இந்தச்சுரண்டல் திட்டத்தையும் திணித்துக்கப்பலேற்றியிருக்கவேண்டும். இதை இன்றைய தலைவர்கள் செய்யத் தவறிவிட்டார்கள். அதை மார்க்சீயவாதிகளால்தான் செய்யமுடியும்.

வேறு எந்த நாட்டவர் மார்க்சீயத்தைப்பற்றிக் குறைகூறினாலும் சரி, புறக்கணித்தாலும்சரி அதுபற்றி நமக்கு அக்கரையில்லை. ஆனால் நம்நாட்டின் இழிநிலைக்கு மார்க்சீயமதான் மாற்றுமருந்து. பழமையின் காட்டுமிராண்டிததனமான கொடுமைகளுக்குப் பலநூற்றாண்டுகளாக ஆளாகித்தவிக்கும் ஓர் சமூகப்புரட்சி தேவை. அதை மார்க்சீயத்தால்தான் சாதிக்கமுடியும். குரூரமான ஜாதித்திமிருக்கும் அருவருக்கத்தக்க சமூகபந்தங்

களுக்கும், சுவிரக்கமற்ற பொருளாதாரச்சுரண்டலுக்கும் ஆளாக்கி நம்மை அலக்கழித்துவரும் அநியாயமான ஏற்றத்தாழ்வு நிறைந்த சமுதாய,பொருளாதார அமைப்பின் அஸ்திவாரத்தை வெடிவைத்துத் தகர்த்தெறிந்து, நவநாகரீகமான சமுதாயத்தையமைக்க மார்க்சியத்தால் தான் முடியும்.

நமது இன்றைய தலைவர்களில் பெரும்பாலோர் பிற்போக்கின்மேலான பிரதிநிதிகள். பழமையின் பித்துக் கொள்ளிகள். பழமைக்குப் பெருமைகொடுத்துப் பேசுவதுதான் அவர்களது அரசியல். அதற்கோர் புனிதத தன்மை கொடுப்பதுதான் அவர்களது தத்துவம். அவர்களது இந்த விபரீதப்போக்கின் காரணமாக மக்களதுவாழ்வு பாழ்பட்டுவிட்டது. மூடநம்பிக்கையும், வீர ஆராதனையும் இன்றுநாட்டிலே தலைவிரித்தாடுகின்றன. பழமைக்குப் பெருமைகொடுத்துப் பேசுவதும், அதை வணங்கி வழிபடுவதும் நவநாகரீகமெனக்கருதப் படுகின்றன. புதுமை புறக்கணிக்கபபடுகினறது! பிற்போக்கு நம்மையிருக்கிப்பிடிக்கிறது. உலகம் நம்மைக் கண்டு நகைத்துக்கொண்டு முன்னேறுகின்றது! இந்த நிலை நீடிக்குமானல் நமக்குப் பேராபத்துக்களேற்படுவது நிச்சயம். பழமைவிரும்பிகளால் பயங்கரப்பாதையிலே அழைத்துச்செல்லப்படுகின்றோம்! அதன் காரணமாக, நாட்டிற்கு ஏற்பட்டிருக்குந் தீங்குகளை நினைக்கவும் நெஞ்சங்குமுறுகின்றது! பழமை மோகம் மக்களை வெறியர்களாக்கிவிட்டது.காட்டுமிராண்டிகளாக்கிவிட்டது! சிந்திப்பது குற்றமாகக் கருதப்படுகின்றது! தலைவர்களின் கட்டளைகளுக்குக் கண்ணைமூடிக்கொண்டு பணிவது, போற்றிப்புகழப்படுகின்றது. இவைகாரணமாக நாடுகாட்டாகக் காட்சியளிக்கின்றது. எங்கும் கோரப்போர்! கொலை! கொள்ளை! கொடுமை!கற்பழிப்பு! முதலிய காதகச்செயல்

கீள் மலிந்துவிட்டன் இதுவா வாழ்வு? இதுவா நாகரீகம்? உலகம்போற்றும் உத்தமர்கள் வாழ்வதாகச்சொல்லப் படும் நாட்டிலா இந்தக் காட்டுமிராண்டித்தனம்! அரசியல் மேதைகளென தங்களை அகிலவுலகமும் பறைசாற்றி வரும் தலைவர்கள்வாழும் நாட்டிலா இவ்வநாகரீகவாழ்வு? வெட்கம்! வெட்கம்! அகிலவுலகமும் நம்மைக்கண்டு நகைக்கிறது! கேலி பேசுகின்றது!

நாட்டின் இன்றைய இருள்சூழ்ந்தநிலையை, பயங்கரப்போக்கை மாற்றியமைக்கவேண்டிய பொறுப்பு இந்த நாட்டு இளைஞர்களைச் சார்ந்ததல்லவா? இளைஞர்களின் தோள்வலிமையின்றி எந்தநாடு விடுதலை பெற்றுளது? எந்தநாடு சுகங்கண்டது? இதை இன்னுமா நீங்கள் உணரவில்லை? எழுங்கள், என்னிளந்தோழர்களே! காலம் ஒப்பற்றது. அதை வீணாக்குவது வாழ்வை வீணாக்குவதாகும். உங்களது பணியைக்கோரித் தமிழகம் தவங்கிடக்கின்றது. நீங்கள் செய்துமுடிக்கவேண்டிய செயல்கள் பலவுள. மக்களை அவர்களது மடமைநிறைந்த பழங்காலவாழ்விலிருந்து மீட்கவேண்டும். அவர்களுக்கு நவநாகரீகவாழ்வை நல்கவேண்டும். இம்மாபெரும் பிரச்னைகளை மிகக்குறுகிய காலஅளவிலே செய்துமுடிக்க வேண்டும். அப்பொழுதுதான் நாம் உலகமக்களுடன் சரிநிகர் சமானமாக வாழமுடியும். வாழ்வின் புயலுக்கும் சுழலுக்கும் அஞ்சாது நீங்கள் எடுத்தகாரியங்களைச் செய்துமுடிக்கவேண்டும். இதுதான் இளைஞர்களின் வாழ்வின் லட்சியம். இளைஞர்களாகிய உங்களால்தான் இவைகளைச் செய்துமுடிக்கமுடியும். தமிழகத்தின் எதிர்காலம் உங்களது கைகளில் ஒப்படைக்கப்பட்டுவிட்டது. அதன் வாழ்விற்கும், தாழ்விற்கும் பொறுப்பாளிகள் நீங்களே. உங்களது பெரும்பொறுப்பை உணருங்கள்.

கடமையைச்செய்யக் களிப்புடன் முன்வாருங்கள். அன்னை பணிபுரிய, அடிமைத்தளையவிழ்க்க, வீரர்களாகத்திகழ, தமிழர்களாகவாழ வாருங்கள், விரைந்து வாருங்கள், ஓடிவாருங்கள்.

Printed at Jothi Press, High Road, Triplicane, Madras.
for Q. H. M. S. No. 389-47 Copies 3000.